# வானவில்

# VAANAVIL

இதழ் 172 சித்திரை 2025

ISSUE 172 April 2025


# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த மக்களுக்கு கிடைத்த வாய்ப்பு!




இலங்கையில் நீண்ட காலமாக நடத்தப்படாமல் நிலுவையில் இருந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் மே மாதம் 6 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபைகள் எனும் போது, மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள், பிரதேச சபைகள் என்பன இதற்குள் அடங்கும்.

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் இந்த உள்ளூராட்சி சபைகள்தான் அடிமட்டத்தில் உள்ள, மக்களுடைய நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புள்ள அரசதிகார நிர்வாக அலகுகள்.

இந்தச் சபைகளின் அதிகாரங்களும், எல்லைகளும், பெயர்களும் சுதந்திரத்துக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டிருந்தாலும், அடிப்படையில் இவற்றின் வடிவங்களும் நோக்கங்களும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் வகுக்கப்பட்டதின் அடிப்படையிலேயே இன்றும் இருக்கின்றன.

பிரித்தானியர் தமது நிர்வாக வசதிக்காக இலங்கையை மேலிலிருந்து கீழாக மாகாணங்கள், மாவட்டங்கள், காரியாதிகாரி (இன்றைய உதவி அரசாங்க அதிபர்) பிரிவு, கிராமசேவையாளர் பிரிவு என வகுத்து வகைப்படுத்தினர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் அமைப்பான நாடாளுமன்றம் இருந்தது. அதற்குத் துணையாக "செனட் சபை" என்ற மூதவை இருந்தது. அவற்றின் கீழே உள்ளூராட்சி சபைகள் இருந்தன.

இந்த உள்ளூராட்சி சபைகள் அதிகாரப் பகிர்வு (Devolution of Powers) அலகுகள் அல்ல. ஆனால் அவைகள் ஓரளவு சுயாதீனமாக இருந்த அதேவேளையில், அரசின் அதிகாரப் பரவலாக்க (Decentralization of Powers) அலகுகளாகவும் இருந்தன.

இலங்கையில் இனப்பிரச்சினை தலைதூக்காத காலத்தில் இத்தகைய நிர்வாக அலகுமுறை ஏற்புடையதாக இருந்தது. ஆனால் இனப்பிரச்சினை தோற்றமடைந்து, சிறுபான்மை இனங்கள், குறிப்பாக இலங்கைத் தமிழினம் போராடத் தொடங்கியதும், இந்த நிர்வாக அலகுகளுக்கு மேலாக இனங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்கென சில அமைப்புகள் தேவைப்பட்டன.

அந்த வகையில் உருவானவைதான், 1957 இல் பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை மூலம் உருவாக இருந்த பிராந்திய சபைகள், 1965 இல் டட்லி சேனநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை மூலம் உருவான மாவட்ட சபைகள், 1980 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன – அமிர்தலிங்கம் உடன்படிக்கை மூலம் உருவான மாவட்ட அபிவிருத்திச் சபைகள், 1987 இல் இந்திய – இலங்கை (ராஜீவ் காந்தி – ஜே.ஆர்.) உடன்படிக்கை மூலம் உருவான மாகாண சபைகள், 2000ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிக முன்மொழிந்த தீர்வுத் திட்டம் என்பன.

இந்த முயற்சிகளில், இந்தியா தலையிட்டதன் காரணமாக மாகாண சபைத் திட்டம் மட்டுமே இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்ட ஒரேயொரு திட்டமாகும். அந்தத் திட்டமும் இதுவரை பதவிக்கு வந்த எந்தவொரு அரசாங்கத்தாலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படாததுடன், இன்று பதவியில் இருக்கும் சிங்களத் தேசியவாத தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வருவதின் ஊடாக மாகாண சபை முறைமையினை நீக்கி விடவும் முனைந்து நிற்கிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிலுவையில் இருந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை மே மாதம் 6 ஆம் திகதி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை வரவேற்கத் தகுந்தது எனினும், அரச ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்வது போல, ஜனநாயகத்தின் மீது உள்ள அதீத பற்றுதல் காரணமாக அரசாங்கம் இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

# தூசு தட்டப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம்

47 வருடங்களாக இலங்கையில் அமுலிலிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கை அரசியலில் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜங்க அமைச்சருமான பிள்ளையான் ஏப்ரல் 8ம் திகதி கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றார். இதனையடுத்து, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜே.ஆர். ஜெயவர்தன காலத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மீண்டும் கையிலெடுத்து, இச்சட்டத்தினை அரசியல் பழிவாங்கலுக்காக பயன்படுத்தப்பட போகின்றார்களா என்ற அச்சம் எழுந்துள்ளது.

பிள்ளையான் கைது செய்யப்பட்டதின் பின்னணியில், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவிந்திரநாத் 2006 ஆம் ஆண்டு காணாமல்போன சம்பவம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. 18 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பிள்ளையானை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்க முடியுமானால், தற்போதைய அரசில் பிரதான பங்காளியாக இருக்கும் ஜே.வி.பியினரில் பலரை 1987–1989 ஆம் ஆண்டுகால பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக இந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கலாம். குறிப்பாக, 1989 ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சந்திரட்ன படுவதவிதான ஆகிய இருவரையும் பல்கலைக்கழகத்தினுள் வைத்து சுட்டுக் கொன்ற ஜே.வி.பி கொலையாளிகள் அல்லது உடந்தையாக இருந்தவர்கள் இன்னமும் சுதந்திரமாக உலவித் திரிகிறார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது 1978 ஆம் ஆண்டு தற்காலிகப் பொறிமுறையாக இயற்றப்பட்டு, 1982 ஆம் ஆண்டு நிரந்தர சட்டமாக்கப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழ் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமானது, தமிழ் ஆயுத போராட்டக் குழுக்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு வழிமுறையாக நியாயப்படுத்தப்பட்டது. அச்சட்டம் அமுலுக்கு வந்தபோது, அதனை எதிர்த்து இடதுசாரிச் சிந்தனையுடையவர்களும் நீதிக்கும் சமத்துவத்திற்கான அமைப்பினருமே வீதிகளில் இறங்கிப் போராடினார்கள்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் வாக்களிப்பிற்கு விட்டபோது, அப்போதைய எதிர்க்கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இலங்கை சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்ரிபால சேனநாயக்க என்ற ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால் வடக்குக்கிழக்கில் இருந்து 18 ஆசனங்களை வென்று, பெரும்பான்மை தமிழ் மக்களின் ஆதரவுடன் பாராளுமன்றத்திற்குச் சென்று, எதிர்க்கட்சி ஆசனத்திற்குள்ளும் அமர்ந்திருந்த த.வி.கூ, பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக வாக்களிக்காது பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தில் வாக்களித்தால், பாராளுமன்றத்தை கலைத்து விடுவதாக ஜே.ஆர். ஜெயவர்தன தமிழர் விடுதலைக் கூட்டணியை மிரட்டியுள்ளதாக சொல்லப்படுகின்றது. அவ்வாறு பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடுமெனவும் அமிர்தலிங்கம் அஞ்சினார். அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தையே அடக்குவதை நோக்கமாகக் கொண்டது என்பதாலுமே த.வி.கூ. அதனை எதிர்க்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் முதலாம் பகுதியில் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவிற்கமைய குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஆதாரங்கள் எவையுமின்றி ஆட்கள் எவரையும் எதேச்சதிகாரமாக கைது செய்ய அனுமதியளிக்கிறது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை 90 நாட்கள் வரை விசாரணையின்றி காவலில் வைக்க முடியம். மேலும் இது 18 மாதங்கள் வரை நீடிக்கப்படலாம்.

பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி, நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டம் தவறாகப் பிரயோகிக்கப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சில தமிழ் இளைஞர்கள் சிறைகளில் பல ஆண்டுகளாக அல்ல, பல தசாப்தங்களாக இருந்துள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சில தமிழ் கைதிகள் அவரது வயதை (அப்போது 35 வயது) விட நீண்ட காலமாக சிறைகளில் இருப்பதாகவும், அவர்களுக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படவில்லை என்றும் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் 2021 ஆம் ஆண்டு கூறியிருக்கிறார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்து மக்களினதும் சுதந்திரத்தை உறுதி செய்தல்' என தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. கடந்த வருடம் வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், மந்திரிசபை கூட்டமொன்றின் பின்னர் 'இந்த நேரத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவோ அல்லது திருத்தவோ முடியாது' என அறிவித்திருந்தார். ஆனால் பெப்ரவரி 28 அன்று பாராளுமன்றத்தில் பேசிய ஜனாதிபதி, தனது அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்து ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவித்தார். இதன் அர்த்தம், பயங்கரவாத தடைச்சட்டம் இன்னொரு புதிய பெயரில் அமுலுக்கு வரலாம் என்பதே.

இதேவேளையில், 'ஒரு வளமான நாடு மற்றும் ஓர் அழகான வாழ்க்கையை' நோக்கமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, பயங்கரவாதத் தடைச்சட்டம் எதிர்காலத்தில் ஒழிக்கப்படுமென பிரதமர் ஹரிணி அமரசூரிய ஏப்ரல் 12ம் திகதி தெரிவித்துள்ளார். இவ்வாறு அரசிலுள்ள மூன்று முக்கியமானவர்கள் கூறுவதை வைத்துப் பார்த்தால், தேசிய மக்கள் சக்தி அரசு இந்தச் சட்டத்தை சாக்குபோக்குச் சொல்லி ஏதோவொரு வகையில் நீடிக்க விரும்புகிறார்கள் என்பது தெளிவாகின்றது. அதாவது தமது அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்டுவதற்கு அவர்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் அத்தியாவசியமானதாகத் தெரிகின்றது. இச்சட்டத்தின் துணையுடன்தான் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஜே.ஆர் தலைமையிலான அரசு, அரச பயங்கரவாதம் புரிந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

***சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!***

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

–ஆசிரியர் குழு

# அமெரிக்கா உலகின் ஒரேயொரு வல்லரசாக நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியாது!

**க**டந்த பல தசாப்தங்களாக உலக ஒழுங்கு மாற்றமடைந்து வந்துள்ளது. இன்று அது இன்னமும் ஒற்றைத்துருவ (Unipolar) சக்தியாக இல்லை. அத்துடன், இந்த மாற்றம் எமது எல்லைகளின் உள்ளேயும் வெளியேயும் உள்ளவர்களுக்கு தெளிவானதாகும்.

நான் நீண்ட காலமாக ஆட்சிக்கலைத் துறையில் (Stategraft) ஒரு மாணவனாகவும் செயற்பாட்டாளராகவும் இருக்கின்றேன். ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யு. புஷ்க்குக்கான (George H.W.Bush) கொள்கை திட்டமிடல் தலைவர் உட்பட, ஜனநாயக கட்சி (Democratic Party), குடியரசுக் கட்சி (Republican Party) ஆகிய இரு தரப்பு ஜனாதிபதிகளுக்காக நான்கு தசாப்பதங்களாகப் பணியாற்றியுள்ளேன். அத்துடன், ஜனாதிபதி பில் கிளின்டனின் (Bill Clinton) விசேட தூதுவராகவும், ஜனாதிபதிகள் ரொனால்ட் ரேகன் (Ronald Reagan) மற்றும் பராக் ஒபாமா (Barack Obama) காலத்தில் பாதுகாப்பு சபை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளேன்.

2006இல் இராஜதந்திரம் பற்றி எழுதிய ஒரு நூலில், ஜோர்ஜ் டபிள்யு. புஸ்சின் வெளிவிவகாரக் கொள்கையில் தவறவிட்டதாக நான் உணர்ந்தவற்றை விளக்கியிருந்தேன். ஆட்சிக்கலை என்பது எமது நலன்களை முன்னேற்றுவதற்காகவும், பயமுறுத்தல்களை முறியடிப்பதற்காகவும், நாட்டைப் பாதுகாப்பதற்காகவும், இராஜதந்திரத்துறை, பொருளாதாரம், இராணுவம், புலனாய்வு, முகாமைத்துவம், தகவல், அமைப்பு, என எல்லாவற்றையும் பயன்படுத்துவதாகும். அந்த நேரத்தில் புஸ்சின் கொள்கைகள் பற்றி, குறிப்பாக ஈராக் யுத்தம் சம்பந்தமாக, அதாவது, நாம் அதிக விலை கொடுத்து, அதே நேரத்தில் குறைந்த பலனை அடையப்போகும் இந்த யுத்தம் பற்றி சிறிதளவு விளக்கம் எனக்கு ஏற்பட்டிருந்தது.

2003இல் ஈராக் யுத்தத்துக்குப் போவதற்கு முன்னராக ஒரு கூட்டு ஆலோசனைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி புஸ் தலைமை வகித்தார். ஆனால் அங்கு உண்மையான விவாதம் நடக்கவில்லை. 2007இல் எமது கொள்கை தோல்வியடைந்ததுடன். ஈராக் ஒருதலைப்பட்சமான யுத்தத்தால் அழிந்து



போனது. ஜனாதிபதி புஸ் எமது செயல் தந்திரம் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பினார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் Steve Hadley எல்லா சாத்திக்கூறுகளையும் முறைப்படி ஆராய்வதாக உறுதியளித்தார்.

சுவாரசியமான விடயமென்னவெனில், அதே நிர்வாகம் தனது இரண்டாவது பதவிக்காலத்தில், மிகவும் தாக்கமான இராஜதந்திரத்தைப் பின்பற்றியமைதான். 20 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட உலகம் இன்று மாறுபாடாக இருப்பதால் நான் ஒரு புதிய புத்தகத்தை எழுதினேன்.

***டெனிஸ் ரோஸ்*** **(Dennis Ross)**

அப்பொழுது உலகம் ஒற்றைத்துருவ நிலையில் இருந்தது. அமெரிக்க அதிகாரம் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியது. எமக்கு உண்மையான போட்டியாளர்கள் எவரும் இருக்கவில்லை. சீனா நாம் சர்வதேச ரீதியாக உருவாக்கிய உலக வர்த்தக அமைப்பு போன்ற நிறுவனங்களைத் தனது பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தினாலும், அது பரஸ்பர வர்த்தகம், முதலீடு சம்பந்தமான விதிகளைப் பின்பற்றவில்லை.

நாம் உலகம் முழுவதையும் முழுமையான அளவில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்ததால், சீனாவின் விதி மீறல்கள் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ரஸ்யாவும் எமக்கு சவால் விடும் அளவுக்கு இருக்கவில்லை. ஆனால், 2007 இல் மூனிச்சில் (Munich) நடைபெற்ற பாதுகாப்பு சம்பந்தமான கருத்தரங்கில் ரஸ்யாவும் மற்றவர்களும் ஒற்றைத் துருவ கருத்தை ஏற்கவில்லை என விளாடிமிர் புட்டின் (Vladimir Putin) சமிக்ஞை வெளியிட்டார். அந்த நேரத்தில் அவரது மதிப்பீடு அமெரிக்க மேலாதிக்கத்தின் யதார்த்தத்தை மாற்றக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால் இன்றைய யதார்த்தம் வேறு. சர்வதேச ரீதியாக சீனாவும் ரஸ்யாவும் எமக்குப் போட்டியாளர்களாக இருக்கின்றனர். அதிலும் சீனா, பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சவாலாக இருக்கின்றது. பிராந்திய ரீதியாக நாம் ஈரானினதும், வட கொரியாவினதும் சவாலை எதிர்நோக்குகின்றோம். அமெரிக்கா இன்னமும் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலமான நிலையில் இருந்தாலும், நாம் ஒரு பல் துருவ (Multipolar) சூழலில் செயல்பட வேண்டியிருப்பதால் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நெருக்கடிகள் சர்வதேச ரீதியாக மட்டுமின்றி, உள்நாட்டு ரீதியிலும் இருக்கின்றது.

ஜனாதிபதி டொனால்ட ட்ரம்ப் (Donald Trump) மற்றும் உதவி ஜனாதிபதி ஜேடி வான்ஸ் (JD Vance) ஆகியோரால் முன் வைக்கப்பட்டுள்ள ஜனரஞ்சகமான மற்றும் தேசியவாத கொள்கைகள் உலகில் அமெரிக்காவின் பாத்திரம் என்ன என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பியுள்ளது. 2006இல் ஈராக்கில் அமெரிக்காவின் பாத்திரம் பற்றி எழுதி விவாதத்துக்குள்ளாகிய விடயம், இப்பொழுதும் அமெரிக்க தலைமை பற்றி சர்வதேச ரீதியாகவும் விவாதிக்கப்படுகிறது. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நாம் நடத்திய

யுத்தங்களில் அமெரிக்காவின் பங்கு குறித்து சில அடிப்படைக் கேள்விகள் எழுந்துள்ளன.

இத்தகைய சூழ்நிலையில், செலவுகள் தீர்க்கமான ஒன்றாக இருப்பதால், ரஸ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள உக்ரைனுக்கு தொடர்ந்து உதவியளிக்க முடியாத நிலைக்கு அமெரிக்கா ஆளாகியுள்ளது.

வெளிவிவகார கொள்கையில் எமது பாரம்பரியங்கள் குறித்து ஆராய்ந்துள்ளேன். ஏனெனில், எந்த எந்த ஜனாதிபதிகள் எமது ஆட்சிக்கலையை கண்டு பிடித்து அதற்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள் என்பதைக் கண்டறிவதற்காக, ஜனாதிபதி ட்ரம்ப் மேற்படி பாரம்பரியங்களைப் பின்பற்றவில்லை என ஒருவர் நினைக்கலாம். ஆனால் அவர் ஒரு தலைப்பட்சம் என்ற விடயத்தை அதிலிருந்து பின்பற்றுகிறார்.

வரலாற்று ரீதியாக, எதிர்பார்ப்பு சம்பந்தமான எமது பிம்பத்தை – நாங்கள் சுயநலமற்றவர்கள், நாங்கள் சுதந்திரமானவர்கள், எமது பெறுமானங்கள் சர்வவியாபகமானவை – இரண்டு வித்தியாசமான வழிகளில் நியாயப்படுத்துகிறோம். ஒன்று, உலகிற்கு முன்மாதிரியான எதிர்ப்பற்ற, நம்பகத்தன்மையுள்ள சேவையாகவும், மற்றது எமது பெறுமானங்களை மற்றவர்களுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் இருக்கின்றது.

அமெரிக்கா தனிமைப்பட்டு இல்லாமல் தன்னிச்சையாக இருந்தது. 19 ஆவது நூற்றாண்டு முழுவதும் அமெரிக்கா எமது வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதற்காக சர்வதேச ரீதியில் இராணுவத் தலையீடு செய்வதிலோ, வட ஆபிரிக்காவில் கொள்ளையர்களுடன் போரிடுவதிலோ, யப்பானுக்கு கடற்படையை அனுப்புவதிலோ, கொரியாவில் தாக்குதல் நடத்துவதிலோ, சீனாவில் நடைபெற்ற பொக்ஸர் கலகத்தைக் (Boxer Rebellion) கையாள்வதிலோ தயக்கம் காட்டியதில்லை.

எப்படியிருந்த போதிலும், பொதுவாக எமது தலையீடுகள் கூட்டணிகளின் சேவையாகவோ அல்லது உயர்ந்த நோக்கமுடையதாகவோ இருக்கவில்லை. அவை எமது பொருளாதார நலன்களுக்கு சேவை செய்வனவாக இருந்தன. டொனால்ட் ட்ரம்ப் அந்தப் பாரம்பரியத்தை சுவீகரித்துக் கொண்டார். ஜனவரி 20ஆம் திகதி அவர் நிகழ்த்திய அங்குரார்ப்பண உரையில் அவர் எமது எதிர்பார்ப்பை இரண்டு தடவைகள் மேற்கோள் காட்டினார்.

ஆனால், எதிர்பார்ப்பு பற்றிய அவரது நியாயப்படுத்தல் எமது உடனடி நலன்களுக்காக சுதந்திரமாக நாம் எதையும் செய்யலாம் என்ற வாதத்தை முன் வைத்தது. அவர் எப்பொழுதும் தனது தீர்மானங்களை அமெரிக்காவின் முன்மாதிரியாக உலகத்துக்கு முன் வைப்பதில்லை.

பொதுவாக, நோக்கங்களும் வரும்படிகளும் தரப்படுபவை என ஒருவர் நினைக்கலாம். ஏன் ஒருவர் எம்மிடம் இல்லாத கொள்கையை எமது நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்துகிறார். பதில் என்னவென்றால், துரதிஸ்ட்டவசமாக, குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளைச் சேர்ந்த ஜனாதிபதிகள் தவறான நோக்கங்களை எடுத்துக் கொள்கிறார்கள்.

ஏன்? அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, நாம் என்னத்தை அடையப் போகிறோம் என்பதை விளங்கிக் கொள்ளாதிருத்தல். ஈராக்கில் ஆட்சி மாற்றம் செய்வதென புஸ் எடுத்த முடிவு இதற்கு ஒரு சிறந்த உதாரணம். இரண்டாவது, தவறான நோக்கங்களை எடுப்பதற்கும், அதை அடைவதற்கு தேவையான தயார் நிலையை எடுக்காதிருப்பதற்கும் அரசியல் அழுத்தங்கள் காரணம்.

வியட்நாமில் தலையிடுவதற்கு லிண்டன் பி.ஜோன்சன் (Lyndon B.Johnson) தயங்கிய போதும், வியட்நாமை இழந்து அதனால் சீனாவுக்கு வாய்ப்பாகப் போகும் என்ற அரசியல் விளைவுகள் காரணமாக இருக்கும் என்ற பயத்தினால் தலையீடு செய்தார். சிரியாவில் உள்ள அரசாங்கம் சிரியர்களைக் கொலை செய்வது அதிகரித்து வருகிறது என்ற நிலை ஏற்பட்ட பொழுது, எந்தவிதமான திட்டமும் இல்லாமல், ஜனாதிபதி பஸார் அல் ஆஸாத் (Bashar al Assad) வெளியேற வேண்டும் என அறிவித்தார் பராக் ஒபாமா.

மூன்றாவதாக, எப்பொழுதும் நாம் மிகவும் உயர்வான நோக்கங்களை வகுப்பதால் அவற்றை சுலபமாக நடைமுறைப்படுத்த முடியாது. ட்ரம்ப் உக்ரைனிலும் காஸாவிலும் போரை நிறுத்த வேண்டும் என அறிவித்தார். அவை முக்கியமான நோக்கங்களாக இருந்தாலும் இப்போதைக்கு நடைமுறைப்படுத்தப்பட முடியாதவை.

நாம் வரித்துக்கொண்ட குறிக்கோள்கள் சம்பந்தமான சாத்தியக்கூறுகள் சம்பந்தமான படிப்பினைகளை கவனமாக ஆராய வேண்டும். எமது இலக்கை அடைவதற்கான அக்கறைகள், அதன் பெரும் சாத்தியக்கூறுகள் அடைவதற்கு தயாராக இருக்க வேண்டும். எப்படி எமது இலக்குகள் சம்பந்தமாக எவ்வளவு விளக்கி உருவகப்படுத்தியுள்ளோம் என்பதைப் பொறுத்துத்தான் எமது உள்நாட்டு ஆதரவு மட்டுமின்றி, சர்வதேச ஆதரவையும் வென்றெடுக்க முடியும்.

ஜனாதிபதி ட்ரம்ப் எமது கூட்டாளிகளுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுப்பதில்லை. அத்துடன், கூட்டாளிகள் என்றால் எங்களுக்கு உரியவர்கள் என்ற கருத்தே நிலவி வந்தது. அதே நேரத்தில், முன்கூட்டியே நாம் எமது குறிக்கோள்களை வடிவமைப்பது நாம் அடைய வேண்டியதை அடைவதற்கு சர்வதேச ஆதரவை வென்றெடுப்பதற்கு உதவியாக அமையும்.

ஈரானையும் அதன் அணுவாயுதத் திட்டத்தையும் எடுத்துப் பார்ப்போம். ஈரான் ஒரு அணுக்குண்டைப் பெறுமாக இருந்தால், சவூதிகள், எகிப்தியர்கள், துருக்கியர்களும் தாங்களும் அவ்வாறானதொன்றைப் பெற நினைப்பார்கள். அதனால் அந்தப் பிராந்தியம் மிகவும் ஆபத்தான குழப்ப நிலைக்குச் செல்லும். ஈரானியர்கள் அத்தகைய ஆயுதத்தை அடைவதை எட்டியிருந்தால் அது அவர்களது நிலையை உயர்த்தி இருக்கும். ஈரான் 10 அணுக்குண்டுகளைத் தயாரிக்கும் அளவுக்குத் தேவையான யூரேனியத்தைப் பதப்படுத்தியிருந்தால், அவர்கள் அதைத் தயாரிப்பதற்கு முன்னர் ஈரான் மீது இராணுவத் தாக்குதல் வேண்டுமென இஸ்ரேல் கருதும்.

ட்ரம்பின் குறிக்கோள் என்ன? ஈரான் ஒரு அணுக்குண்டை தயாரிப்பதை நிறுத்தினால் மட்டும் போதாது. பின்னர் தன்னும் அத்தகைய ஒன்றைத் தயாரிக்கும் நோக்கத்தையும் தடுக்க வேண்டும். ஈரானியர்கள் அர்த்தபுஸ்டியுடன் சிந்திக்கும் அளவுக்கு அவர் அவர்கள் மீது அழுத்தத்தைப்

பிரயோகிக்க வேண்டும். ஈரானியர்கள் அதைத் தவிர்க்கும் வகையில் அரசியல் ரீதியிலான தனிமைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். பொருளாதாரத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஈரானியர்கள் தமது பொதுமக்களிடமிருந்து தனிமைப்படுவது அதிகரித்து வருவதை உணர வேண்டும். இராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், 40 வருடங்களாக தாம் கட்டமைத்து வந்த முழு அணுவாயுதக் கட்டமைப்பும் அழியும் என்பது ஈரானியர்களுக்குத் தெரியும்.

ட்ரம்ப் நிர்வாகம் ஈரான் செய்வது ஆபத்தானது என்ற விடயத்தை வடிவமைத்து, உலகத்திலிருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி, அவர்களை இராஜதந்திர ரீதியான ஒரு தீர்வுக்கு வர வைக்க வேண்டும். ஈரான் சிவில் அணுத் தேவைகளுக்கு அதைப் பயன்படுத்துவதாக இருந்தால் அதை அனுமதிக்க வேண்டும்.

ஆட்சிக் கலையின் மூலம் நாம் சரியான குறிக்கோளை வகுத்துக் கொள்வதுடன், சகல செயற்பாடுகளின் ஊடாகவும் அதை அடைவதற்கு மற்றவர்களையும் இணைய வைக்க வேண்டும். ட்ரம்ப் நிர்வாகம் அதைச் செய்யுமா? ஜனாதிபதி விரும்பும் "வெற்றி" என்பதை அடைய விரும்பினால், இதைச் செய்வதை நிச்சயப்படுத்த வேண்டும்.

(அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபலமான 'ரைம்' (Time) சஞ்சிகையில் வெளியான ஒரு கட்டுரையின் முக்கியமான பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன)

## *இந்தியா, சீனாவுக்கு புதிய 'பொற்காலம்?'*



சீனாவில் தலா 1000 தொன் தங்கம் புதைந்துள்ள இரண்டு தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது உலக மக்களின் ஆவலைத் தூண்டியுள்ளது.

தங்கச் சுரங்கத்தை கண்டறிவதற்கான ஆய்வை சீனா நீண்டகாலமாக நடத்தி வந்தது. அதில் ஹூனான் (Huanan) மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் 1000 தொன் அளவுக்கு தங்கம் இருப்பதாக கடந்த நவம்பரில் அறிவிப்பு வெளியிட்டது. தற்போது லியோனிங் (Liaoning) மாகாணத்தில் இன்னொரு 1000 தொன் தங்கச் சுரங்கம் இருப்பதாக மற்றொரு செய்தி வந்திருப்பது தங்க வர்த்தகர்கள் மத்தியிலும் உலக நாடுகள் மத்தியிலும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவை உறுதியானால், உலகில் அதிக தங்கம் உற்பத்தி செய்யும் தென்னாப்பிரிக்காவின் 'சவுத்டீப் கோல்டு மைன்' (South Deep Gold Mine) சுரங்கத்தை விட பெரிய தங்கச் சுரங்கமாக சீனாவின் தங்கச் சுரங்கம் திகழும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தங்க உற்பத்தியில் சீனா கணிசமான அளவு தங்கம் உற்பத்தி செய்தாலும், தென்னாப்பிரிக்கா, அவுஸ்திரேலியா, ரஷ்யா நாடுகளே தற்போது முன்னணியில் உள்ளன.

இப்போது கண்டறியப்பட்டுள்ள தங்கச் சுரங்கத்தின்மூலம் அந்த நாடுகளை பின்னுக்குத் தள்ளி சீனா முந்திவிடும் என்றும் கூறப்படுகிறது. குறிப்பாக, உலக அளவில் வர்த்தக வரி தொடர்பான போர், பொருளாதார தேக்கம் குறித்த அச்சம் வெளியிட்டு வரும் நிலையில் சீனாவுக்கு கிடைத்துள்ள இந்த 'ஜாக்பாட்' (Jack Pot) அந்நாட்டை மற்ற நாடுகளை முந்திச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தச் செய்தி வெளியான சில தினங்களுக்குள் இந்தியாவிலும் ஒடிஷா மாநிலத்தில் அதிக அளவில் தங்கம் இருப்பதாக வெளிவந்துள்ள செய்தி இந்தியர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது. இந்திய புவியியல் ஆய்வு மையம் (Geological Survey of India - GSI) நடத்திய பல்வேறு கட்ட சோதனையின் முடிவாக ஒடிசா மாநிலத்தில் உள்ள சுந்தர்கர், நபராங்பூர், கியோஞ்சர், தியோகார் உள்ளிட்ட மாவட்டங்களில் கணிசமான அளவு தங்கம் புதைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களுக்கு பெயர்பெற்ற ஒடிசா மாநிலத்தில் தங்கமும் புதைந்திருப்பதில் ஆச்சரியமில்லை என்பது மட்டுமின்றி, இவை வெட்டியெடுக்கப்பட்டால் இந்தியாவின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

உலக அளவில் ஜவுளி, பட்டாசு, மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி உள்ளிட்ட பல துறைகளில் போட்டியாளர்களாக இருந்துவரும் இந்தியாவும், சீனாவும் தங்க உற்பத்தியையும் கணிசமாக மேற்கொள்ளும்போது இருநாடுகளும் தெற்காசிய பிராந்தியத்தில் வலுவான பொருளாதார சக்திகளாக உருவெடுக்கும்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்தியாவும் சீனாவும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியில் புதிய உத்வேகத்தைப் பெறுவதுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியையும் நிலைநாட்டுவது அவசியம்.

# எதிர்வரும் தேர்தலில் அரசாங்கத்துக்கு வீழ்ச்சி ஏற்படும்!

- மேஜர் ஜெனரல் கலாநிதி பொன்பேஃஸ் பெரேரா (Maj.Gen.Bonface Perera)

ஒரு நீதிமன்றத்துக்குள் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உட்பட சமீபத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. பலர் இந்தச் சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறுகின்ற அதே வேளையில், அரசாங்கமோ எல்லாக் குற்றவாளிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என உறுதியளித்துள்ளது.

இருப்பினும், அனுபவமிக்க இராணுவ அதிகாரிகள், தேசிய பாதுகாப்பு என்பது ஒரு விரிவான விடயமாக இருப்பதால், அதைக் கையாள்வதற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை என்கின்றனர்.

வன்னிப் பிரதேசத்தினதும், கிழக்கு மாகாணத்தினதும் ஆயுதப் படைகளின் முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கலாநிதி பொனிபேஃஸ் பெரேரா தேசிய பாதுகாப்பும், தேசிய பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை எனக் கருதுகிறார். கடினமான காலாட்படையின் ஒரு அதிகாரியான கலாநிதி பெரேரா, 26 ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்ததுடன், அதில் 20 ஆண்டுகள் சுறுசுறுப்பான யுத்த வீரனாகவும் இருந்தவர். கலாநிதி பெரேரா பொருளாதாரத்தில் கலாநிதி பட்டம் பெற்றிருப்பதுடன், ஆய்வாளராகவும், எழுத்தாளராகவும், தொழில் முயற்சியாளராகவும் இருப்பதுடன், சர்வதேச ரீதியில் தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் சம்பந்தமான ஒரு விசேட ஆய்வாளராகவும் இருக்கின்றார். அவர் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக 'டெயிலி மிரர்' (Daily Mirror) பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

**கடந்த இரண்டு மாதங்களில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளதுடன், அதன் காரணமாக 11 பேர் உயிரிழந்தும் உள்ளனர். இந்தச் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது பற்றி உங்களது அவதானிப்பு என்ன?**

தேசிய பாதுகாப்பு என்பது ஒரு பரந்துபட்ட விடயமாகும். ஜனாதிபதி (அவர் ஆயுதப் படைகளின் தலைவராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும், தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவராகவும் இருக்கின்றார்), பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தேசிய பாதுகாப்பின் விசாலமான தன்மையை விளங்காதவர்களாக இருக்கின்றனர்.

தேசிய பாதுகாப்பு என்பது தேசிய ஐக்கியம் இல்லாமல் இல்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதே போல, தேசிய அபிவிருத்தி இல்லாமல் தேசிய பாதுகாப்பு இல்லை. வேலையில்லாப் பிரச்சினை அதிகமாக இருந்தால், இளைஞர்கள் விரக்தியில் இருந்தால், நீதிமன்றங்கள் நியாயமான தீர்ப்புகளை வழங்காமல் இருந்தால், பொலிசார் மக்களுடன் நட்புறவுடன் இல்லாமலிருந்தால், அதன் பிறகு இந்த எல்லா விடயங்களும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.



மறுபக்கத்தில், திறமையற்ற அரசுத்துறை, வறுமை, சுகாதாரக் கேடு என்பனவும் தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும். எனவே, தேசிய பாதுகாப்பு என்பது இவையெல்லாவற்றுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் எங்கே இருந்தோம் எனத் தெரியாமல் இருந்தால், நாம் எங்கே இருக்கிறோம் எனத் தெரியாமல் இருந்தால், எமக்கு எங்கே போவது என்பதும் தெரியாமல் இருக்கும். தேசிய பாதுகாப்பு என்பது தண்ணீர் தாரையைப் பாய்ச்சுவதோ, கண்ணீர் புகையை அடிப்பதோ, சில கொலைகாரர்களையும் ஏனையோரையும் கைது செய்வதோ, ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதோ, இறுதியாக அவர்களைக் கொல்வதோ அல்ல.

இவையெல்லாம் குறுகியகால யுத்த தந்திரங்கள். நீதி, பொருளாதார அபிவிருத்தி, வெளிவிவகாரம், கலாச்சார விவகாரங்கள் என்பனவற்றின் அமைச்சுகள் ஒன்றிணைவது தேவையானது. நான் நினைக்கிறேன், சுதந்திரத்துக்குப் பின்னர் இவை எதுவும் நடைபெறவில்லை. எமது நாட்டையும் உலகத்தையும் அந்நியர்கள் ஆட்சி செய்ததால், சுதந்திரம் கிடைக்கும் வரை எமக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

**யுத்தத்துக்குப் பின்னான காலத்தை எடுத்துக் கொண்டால், யுத்தம் முடிந்து விட்டதால் நாம் பாதுகாப்பாக இருக்கிறோம் எனக் கருதினோம். அதன் பின்னர் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடைபெற்ற போது, தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியானது. இது மக்களிடம் ஆயுதங்கள் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியது. உங்களுடைய அனுபவத்தில் இந்த விடயங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

யுத்தம் முடிவடைந்து விட்டதால், நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என நினைக்கிறோம். ஆனால், எனது பதில் "இல்லை" என்பதே. ஏன் இந்த யுத்தம் நடந்தது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். முக்கியமாக எந்தவொரு நிகழ்வினதும் அடிப்படைப் பிரச்சினை என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில குறிப்பிட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அவை எல்லாம் அரசியல் ரீதியானவை. ஆனால் அவற்றுக்குப் பதிலாக இராணுவம் இருந்தது. பிரச்சினை கையாளப்பட்டாலும் அது தொடர்கிறது.

அங்கே ஏறத்தாழ 30,000 பயங்கரவாதிகள் இருந்தார்கள். பலர் கொல்லப்பட்டனர். பலர் சரணடைந்தனர். ஆனால் அவர்களது ஆயுதங்களுக்கு என்ன நடந்தது? அவர்களிடம் ரொக்கட்டுகளைச் செலுத்தும் துப்பாக்கிகள் (RPGs) இருந்தன, விமானங்களைச் சுடும் ஏவுகணைகள் (Missiles) இருந்தன, அத்துடன் 30,000 வரையிலான சிறிய ரக ஆயுதங்களும் இருந்தன. ஆனால், இந்த ஆயுதங்கள் ஒப்படைக்கப்படவில்லை. அவை புதைக்கப்பட்டோ, ஒளித்து வைக்கப்பட்டோ உள்ளன.

இலங்கையில் இருந்த அரசாங்கங்களும்அவர்களிடம் இருந்த ஆயுதங்களின் தொகையையோ, அதில்

எவ்வளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பதையோ, மீதி எவ்வளவு என்பதையோ கணக்கெடுத்தது கிடையாது. எம்மிடம் எந்தவொரு ஆய்வும் இல்லையென்பதுடன், உண்மையில் ஆய்வு செய்வதிலும் அபிவிருத்தியிலும் நாம் பலவீனமாகவும் இருக்கின்றோம். இந்த ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான எந்தத் திட்டங்களும் இல்லை.

இது பெஸவார் (Peshawar) மற்றும் ஆப்கானிஸ்தான் (Afghanistan) போல உள்ளது. அனுமதி பெற்ற துப்பாக்கிகள் வைத்திருந்தால் அதில் பிரச்சினை இல்லை. ஆனால் அனுமதி பெறாத அல்லது பிரகடனப்படுத்தப்படாத (Undeclared) ஆயுதம் வைத்திருந்தால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. பாதாள உலகத்திடம் (Underworld) இந்த பிரகடனப்படுத்தப்படாத ஆயுதங்கள் உண்டு.

அவர்களிடம் எவ்வளவு ஆயுதங்கள் இருக்கின்றன என்பது யாருக்குத் தெரியும்? ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதலை எடுத்துப் பார்த்தால், இப்படியொரு தாக்குதல் நடக்கும் என நாங்கள் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. எங்கள் தேசிய புலனாய்வு அமைப்பு முறை மிகவும் பலவீனமானது. அமெரிக்கா, நியூசிலாந்து மற்றும் மத்திய கிழக்கில் ஒரு குண்டுத் தாக்குதலோ, வேறு எதாவது தாக்குதலோ நடந்தால், அது எமது தேசிய பாதுகாப்பைப் பாதிக்குமோ என ஆராய்கிறோம். அதை விட்டு, எமது பாதுகாப்பு அதிகாரிகள் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடந்த தாக்குதல் பற்றி ஆராய வேண்டும்.

**இந்த ஆயுதங்களை பயங்கரவாதிகள் கைவிட்டுச் சென்றிருப்பார்கள் என எப்படி நீங்கள் உறுதியாகக் கூறுகிறீர்கள்?**

சில ஆயுதங்களை இராணுவம் கைப்பற்றியது. ஆனால், என்னிடம் போதிய விபரங்கள் இல்லை. நிச்சயமாக புலிகள் இந்த ஆயுதங்களை இனிமேலும் பயன்படுத்தப் போவதில்லை. அத்துடன், நாங்கள் ஒரு சிறிய நாடு. ஒருவர் வடக்கிற்கோ, தெற்கிற்கோ, கிழக்கிற்கோ எட்டு மணி நேரத்தில் பயணித்து விட முடியும். புலிகளின் இந்த ஆயுதங்களில் சில தெற்கிற்கு கடத்தப்பட்டு, அவை பாதாள உலகக் குழுக்களின் கைகளைச் சென்றடைந்திருக்கலாம். இந்த விடயங்கள் எல்லாம் பணத்துக்காகவே நடைபெறுகின்றன.

**ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர், இப்படியான தாக்குதலுக்கான சாத்தியக்கூறு இருப்பதாக சில புலனாய்வுத் தகவல்கள் எமக்குக் கிடைத்தன. ஆனால், எவரும் இதைக் கவனத்தில் எடுக்கவில்லை. அரச புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடுகள் குறித்த உங்கள் கருத்து என்ன?**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலைப் பொறுத்தமட்டில், மற்றவர்களை விட பிரதான குற்றவாளி அந்த நேரத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தான். ஏனெனில், இராணுவத்தின் கட்டளை அதிகாரி, பாதுகாப்பு அமைச்சர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், அத்துடன் பாதுகாப்புச் சபை என்பனவற்றின் தலைவராக அவர் இருந்தார்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் அவர்தான் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பு. எனவே, “எனக்கு ஒன்றும் தெரியாது” எனச் சொல்லி அவர் தப்பித்துவிட முடியாது. பிரதான குற்றவாளி என்ற வகையில் அவரை ஜனாதிபதியாக இருந்த நேரத்திலேயே நீதிமன்றத்துக்கு இட்டுச் சென்று தண்டித்திருக்க வேண்டும். அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சிறப்புரிமையைப் பயன்படுத்த முடியாது.

அவர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியிருக்கிறார். ஜனாதிபதி ஆணைக்குழு அவரைக் குற்றவாளியாகக் கண்டிருந்த போதும், நீதிமன்றம் அதற்குத் தண்டனையாக சில இலட்சங்களை இழப்பீடாக வழங்கும் படியாகவே தீர்ப்பளித்தது.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற போது அவர் சிங்கப்பூரில் இருந்தாலும், ஜனாதிபதி என்ற முறையில் அவரே நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களின் உயிர்களுக்கும் பொறுப்பானவர். விமானத் தாமதம் என்று காரணம் கூறி, கடைசி நேரத்திலேயே அவர் வந்து சேர்ந்தார். இது அவரது பொறுப்பின்மையை எடுத்துக் காட்டுகிறது.

தற்போதைய அரசாங்கம் கூட, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் நீதி வழங்கத் தவறிவிட்டது. இப்படியிருக்கையில், எதிர்காலத்தில் கூட தேசிய பாதுகாப்பு முன்னேற்றமடையும் என நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை தலைவர்கள் ஒரு புறத்தில் புத்திஜீவிகளையும், அதனுடன் இணைத்து, படிப்பறிவர்களையும் தகுதியற்றவர்களையும் வைத்திருப்பது ஒரு போக்காக இருந்து வந்திருக்கிறது. அது போன்ற ஒரு போக்கை இன்றைய அரசியல்வாதிகளிடமும், தலைவர்களிடமும் காண முடிகிறது. கோத்தபாய ராஜபக்சவுக்கு நடந்தது ஒரு சிறந்த உதாரணமாகும்.

**அண்மைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் சரணடைய வேண்டும் என அரசாங்கம் வேண்டியிருக்கிறது. இந்தக் குற்றங்களுக்கும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கும் தொடர்பிருக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

ஆம், மக்கள் இராணுவத்தில் இணைவது பல்வேறு காரணங்களுக்காக என்றபடியால் அதற்கான சாத்தியக்கூறு உண்டு. சிலர் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடனும், சிலர் வருவாய்க்காகவும், வேறு சிலர் தமது அயலவர்களை அல்லது எதிரிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் இராணுவத்தில் இணைகின்றனர்.

எனவே, ஒருவர் இராணுவத்தில் இணையும் போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். யுத்த காலத்திலும், ஏன் அதற்குப் பின்னரும் கூட, இராணுவத்தில் இணைபவர்களின் கல்வித் தகைமை, உயரம், பின்னணி எதுவும் ஆராயப்படுவதில்லை. இது திரும்பத் திரும்ப நடைபெறுகிறது. எனவே, இராணுவத்தில் இருந்து விலகியவர்களையும் தப்பியோடியவர்களையும் அரசியல்வாதிகள், போதைவஸ்து வியாபாரிகள், வர்த்தகர்கள் தமது எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்கு பயன்படுத்தும் வாய்ப்பு உண்டு. அதற்குக் காரணம் அவர்கள் ஆயுதங்களை எப்படிப் பயன்படுத்துவது என்ற பயிற்சி எடுத்திருப்பதால்தான்.

**முன்னாள் இராணுவ வீரர்களுக்கு முறைப்படியான புனர்வாழ்வு**

**பொறிமுறையை நடைமுறைப்படுத்தாதன் காரணமாக இந்த நிலைமை ஏற்படுகின்றதா?**

என்னுடைய கலாநிதி பட்ட (PhD) ஆய்வின் போது, 'ஓய்வு பெற்ற பின்பு என்ன செய்ய விரும்புகிறீர்கள்' என இராணுவத்தினரிடம் கேட்பதுண்டு. சிலர் முச்சக்கர வாகன ஓட்டுனர்களாகவும், சிலர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகவும் (Security Guards), வேறு சிலர் விவசாயிகளாகவும் வர விரும்புவதாகக் கூறுவார்கள். அதைத் தவிர அவர்கள் வேறு ஒன்றையும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. சிலருக்கு தாம் எங்கே செல்வதென்பது தெரிந்திருக்கவில்லை. எனவே, அது சமூகத்தில் ஒரு இடைவெளியாக இருக்கின்றது.

ஒரு வீரர் 18 வயதில் இராணுவத்தில் சேர்ந்து 55 வயதில் ஓய்வு பெறுகிறார். 20 வருட சேவையின் பின்னர் அவர்கள் விலக முடியும். அவர்கள் நாட்டுக்கு மிக நல்லதொரு வளமாகும்.

40 வயது வரை இந்த ஓய்வூதியவர்கள் தொழில் சந்தையில் வேண்டப்படுபவர்களாக இருந்தனர். எனவே, படை வீரர்களுக்கு இரண்டாவது தொழில் ஒன்றைத் தேடுவதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும். அவர்களுக்கு பல்வேறு செலவினங்கள் இருப்பதால் ஓய்வூதியம் போதாது. புனர்வாழ்வு அவர்களுடைய பொருளாதாரத்தைச் சீர்செய்யாது.

ஒரு படை வீரர் ஓய்வு பெற்ற பின்னர் ஒரு மாற்றத்தை எதிர்நோக்குகிறார். அவர்கள் தமது இராணுவ சீருடையை அகற்றி விட்டு ஒரு சாதாரண மனிதனாக மாறுகின்றனர். இந்த மாற்றக் காலத்தின் போது அவர்களுக்கு மன அதிர்ச்சித் தாக்கக் குறைபாடு (Trumatic Stress Disorder) ஏற்பட வாய்ப்புண்டு.

என்னுடைய ஆலோசனை என்னவென்றால், ஓய்வு பெற்ற படை வீரர்களுக்கும், படையிலிருந்து விலகியவர்களுக்கும் தொழில் முயற்சிகளில் (Entrepreneurship) பயிற்சி அளிக்க வேண்டும். இது பல வளர்ச்சியடைந்த நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

இராணுவத்தில் 25 வரையிலான படைப் பிரிவுகள் (Regiments) உண்டு. நாங்கள் ஓய்வு பெற்ற இரணுவத்தினருக்கும், படையில் இருந்து விலகிச் சென்றவர்களுக்கும் மூன்று மாத தொழில் முயற்சிக்கான பயிற்சியை வழங்கலாம். அவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சியையும், சந்தைகளை எப்படித் தேடுவது என்பது பற்றிய பயிற்சியையும் அளிக்க வேண்டும். இது ஒரு குறுகிய காலப் பயிற்சிதான். அதை விடுத்து இராணுவத்திலிருந்து விலகியவர்களைப் பிடிப்பதால் பயனில்லை.

எனது ஆய்வில் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களில் 68 சத வீதமானோர் தொழில் முயற்சியாளர்களாக (Entrepreneurs) வருவதில் ஆர்வமுள்ளோராக இருக்கின்றனர். நான் எனது ஆலோசனைகளை தற்போதைய ஜனாதிபதி உட்பட கடந்தகால ஆட்சியாளர்கள் எல்லோரிடமும் சமர்ப்பித்துள்ளேன். அவர்களில் ஒருவராவது இதில் கொஞ்சம் கூட அக்கறை காட்டவில்லை.



**கடல் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் இன்றைய சூழலில் இலங்கை ஒரு தீவு நாடு என்ற வகையில் அதன் கடல் எல்லைகள் குறித்து நீங்கள் யோசிக்கவில்லையா?**

தேசிய பாதுகாப்பை பொருளாதாரத்தின் செலவில் செய்ய முடியாது. எமது தேசிய இருப்புக்கு எமது கலாச்சாரம் ஒரு முக்கியமான அடிப்படையாகும். ஏராளமான விமானங்கள், ஆயுதங்கள் என்பனவற்றை வைத்திருந்தும் அமெரிக்கா வியட்நாமிலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் தோல்வி கண்டுள்ளது. இதற்குக் காரணம் கலாச்சாரத்தை ஒருவராலும் தாக்க முடியாது.

புலிகள் தோல்வியடைந்ததிற்குக் காரணம் அவர்கள் எமது கலாச்சாரத்தைத் தாக்கிய படியினால்தான். அவர்கள் ஸ்ரீமகாபோதியையும், புத்தரின் புனித பல் வைக்கப்பட்டுள்ள கோயிலையும் தாக்கினார்கள். மதமே எமது காலாச்சாரமாகும். இலங்கையில் வாழ்கின்ற மக்களில் 71 சத வீதமானோர் பௌத்தர்களே. பௌத்தத்தின் மையக் கருத்து அன்பு செலுத்துதலும் (அகிம்சை), நடுநிலைமையான பாதையைப் பின்பற்றலும் ஆகும். எமது வெளிநாட்டுக் கொள்கை மத்திய பாதையைத் தழுவி அணிசேராக் கொள்கையாக இருக்கின்றது. எனவே, நாம் எல்லோருடனும் நட்பாக இருக்கின்றோம். நாம் நல்லதொரு கலாச்சாரத்தைப் பின்பற்றும் சுதந்திர நாடாகும். எனவே, வல்லரசுகள் தமக்குள் அடிபடுவதையிட்டு நாம் கவலைப்படத் தேவையில்லை.

ஆனால், நாம் எமது நிலத்தையும், பிராந்திய ஒருமைப்பாட்டையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்க வேண்டும். நாம் எமது வான் பரப்பையும், கடல் எல்லைகளையும் பாதுகாக்க வேண்டும். எமது ஒன்பது மாகாணங்களையும் இராணுவம் பாதுகாக்க வேண்டும். எமது நிலப்பரப்பு ரஸ்யாவின் நிலப்பரப்பில் 257இல் ஒரு பங்காகும். எம்மிடம் பெரியதொரு இராணுவம் இருப்பது நல்லதுதான். ஆனால் எப்படி அவர்களுக்கு சம்பளம் வழங்குவது?

**முன்னைய காலங்களில் பாதுகாப்புக்கென பெருந்தொகையான நிதி ஒதுக்கப்பட்டது. இனிமேல் அவ்வாறு ஒதுக்கத் தேவையில்லை என்று கூறுகிறீர்களா?**

இராணுவத்தினருக்கு சம்பளம் வழங்க வேண்டியிருந்ததால் அரசாங்கம் அவ்வாறு பெருந்தொகையான நிதியை ஒதுக்க வேண்டியிருந்தது. இதற்கு உடனடித் தீர்வு எதுவும் இல்லை. திட்டமிட்ட அடிப்படையில் இராணுவத்தின் தொகையை படிப்படியாகக் குறைக்க வேண்டும். அத்துடன், இராணுவத்துக்கு சேர்க்கப்படும் ஆட்களின் வயதெல்லையையும் சீரமைக்க வேண்டும்.

நாங்கள் ஒருபோதும் இந்த நாட்டில் ஒரு தூர நோக்குள்ள தலைவரைப் பெற்றிருக்கவில்லை. அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொருவரும் நாட்டுக்கு எதுவும் செய்வதற்குப் பதிலாக தமதும், தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களினதும் பொருளாதார நலன்களைப் பேணுவதிலேயே கருத்தாக இருந்துள்ளார்கள்.

**ஒரு நாடு என்ற வகையில் எமது தேசிய பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படும் போது அதற்கு முகம் கொடுக்க எப்படித் தயாராவது?**

நீங்கள் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்து, அதனுடன் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கினால், அதன் பின்பு என்ன பிரச்சினை? அதன் பின்பு யாரும் 200,000 ரூபாய்காக கொலை செய்யும்படி வரும் வேண்டுகோள்களையோ அல்லது ஒப்பந்தங்களையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தொழில் முயற்சிக்கான கலாச்சாரத்தை உருவாக்குவதே இதற்கான ஒரே பதிலாகும்.

தேசிய பாதுகாப்பை உருவாக்குவதில் நீதித்துறை மிகவும் முக்கியமானதாகும். பொலிஸ் நிலையங்களும், நீதிமன்றங்களும் மக்களுக்கு நட்புறவாக இருக்க வேண்டும். மக்கள் ஒரு அரசாங்க வேலையைப் பெறுவதற்கு தமது நேரத்தை விரயம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, இலங்கையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் (Clean Sri Lanka Programme) இந்த மாதிரியான விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எமது தலைவர்கள் தேவையானவற்றை விட்டுவிட்டு, தேவையில்லாத விடயங்களில் ஈடுபடுகிறார்கள். நாங்கள் சொல்வதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லையென எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது.

**தற்போதைய அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் என நினைக்கிறீர்களா?**

எனது கண்ணோட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச செய்த தவறுகளையே இவர்களும் திரும்பவும் செய்கிறார்கள். கோத்தபாய 100,000 பேரை அரச சேவையில் இணைத்துக்கொள்ள விரும்பினார். ஆனால், அது நடைமுறைச் சாத்தியமற்றது.

எனக்கு 5 – 6 வருடங்களில் கிடைத்த தகவல்களின்படி, அரச சேவையில் மேலதிகமாக 163,000 சிற்றூழியர்களும் (Peons), 100,000 சாரதிகளும் (Drivers) இருக்கின்றனர். அதன்படி அரச துறையில் 250,000 பேர் மேலதிகமாக இருக்கின்றனர்.

இதேபோல, 2009 இற்குப் பின்னரும் ஆயுதப் படைகளிலும் இதே தொகையானோர் மேலதிகமாக இருக்கின்றனர். 52 நாடுகளை ஆட்சி செய்த பிரித்தானிய சாம்ராஜ்யம் தற்பொழுது எம்மை விட சிறிய இராணுவம் ஒன்றையே வைத்திருக்கின்றது. 2009 இற்குப் பின்னர் நாம் எமது இராணுவத்தைப் படிபபடியாகக் குறைத்திருக்க வேண்டும்.

நீங்கள் அரச துறையை எடுத்துப் பார்த்தீர்களானால், 40 – 50 சத வீதம் வரையிலான ஊழியர்கள் மேலதிகமாக இருப்பதைக் காணலாம். அதே நேரத்தில் பலர் ஒரு வேலையைப் பெற முடியாமல் இருக்கின்றனர். எனவே, இந்த அரசாங்கம் அரச துறையில் உள்ள ஊழியர்களைக் குறைக்கும் விடயத்தைப் பாதூரமாக கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் நல்லதைச் செய்கிறதோ இல்லையோ, எதிர்வரும் தேர்தல் ஒரு பரிசோதனையாக இருக்கும். என்னுடைய கருத்தில் அதன் செல்வாக்கில் பாரிய வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. அவர்கள் தாம் கொடுத்த வாக்குறுதிகளை செயல்களின் மூலம் நிரூபிக்க வேண்டும். தர்க்கம் செய்வதினால் அல்ல.

(இது 2025 மார்ச் 4ஆம் திகதிய 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வந்த பேட்டியொன்றின் முக்கிய பகுதிகளாகும்)

---

**11ம் பக்கத்தொடர்ச்சி…**

அனைத்து ஊழல்கார அதிகாரிகளையும் நீக்க வேண்டும். அத்துடன், இலங்கையின் வருங்கால சந்ததியினர் நல்லதொரு வாழ்க்கையை வாழ்வதற்காக சமத்துவமின்மையை இல்லாதொழிக்க வேண்டும்." எனக் கூறினார்.

இலங்கை தொடர்ந்தும் பொருளாதாரக் குழப்பத்துடனும், சமூக அமைதியின்மையுடனும் போராடிக் கொண்டிருக்கையில், அனுர குமார திசாநாயக்கவின் தலைமைத்துவம் கடுமையான சோதனைக்குள்ளாகியுள்ளது. பல ஆதரவாளர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் முற்போக்கான வேலைத்திட்டம் இறுதியில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர். இன்னொரு பகுதியினர் அரசாங்கம் உண்மையில் தனது இலட்சியங்களை நிறைவேற்றுமா என்ற சந்தேகத்தில் இருக்கின்றனர். வரப்போகின்ற மாதங்கள் மக்களின் கருத்துக்கள் தீர்க்கமாக உருவாகப் போகின்ற ஒரு காலமாக இருக்கப் போகின்றது. நாடு பல வருடங்களாக எதிர்நோக்கியிருந்த துன்பங்களில் இருந்து மீள்வதற்கான முயற்சி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நிச்சயமாக ஒரு சவாலாக இருக்கப் போகின்றது.

(இது 2025 மார்ச் 03ஆம் திகதியிட்ட 'டெயிலி மிரர்' (Daily Mirror) பத்திரிகையில் வந்த கருத்துத் தொகுப்பின் முக்கியமான பகுதிகளாகும்)

---

**16ம் பக்கத்தொடர்ச்சி…**

மாத்தறையில் (Matara) இருந்த K - Point என்ற இடங்களுக்குப் பொறுப்பானவர்கள் குறித்தும் விசாரணை நடத்தி அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். முக்கியமாக, 1989இல் ஜே.வி.பியின் நேசத்துரிய தலைவரான ரோகண விஜேவீர மீது நடத்தப்பட்ட சட்டத்துக்குப் புறம்பான கொலை குறித்து விசாரணை நடத்துவது ஜே.வி.பியின் கடமையாகும்.

அதே நேரத்தில், 1980 களில் ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கற்ற கொலைகள், ஆள் கடத்தல்கள், ஆயுத முனையில் செய்த கொள்ளைகள், அரச சொத்துக்களுக்கு ஏற்படுத்திய சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்கு இன்னொரு ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைப்பதும் அவசியமானதாகும்.

2019 இல் நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காக, அந்த நேரத்தில் ஜனாதிபதியாக இருந்த சிறிசேனவும் ஏனையவர்களும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேபோல, 1980களில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களினாலும், அதற்கு எதிர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களினாலும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அதை அரங்கேற்றியவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து இழப்பீடு வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

(கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' – The Island ஆங்கிலப் பத்தரிகையின் 2025 மார்ச் 11ஆம் திகதி வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சம் இது)

# அனுர குமார திசாநாயக்கவின் தலைமை எதிர்நோக்கும் சவால்கள்!

**தே**சிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து 160 நாட்கள் ஆகிவிட்டன. அவர்களது ஆதரவாளர்கள் உட்பட நாட்டு மக்கள் மத்தியில் ஆட்சி பற்றி ஏற்கனவே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி பல வாக்காளர்கள் மத்தியில் நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிக்கும், அரசியல் ஸ்திரமின்மைக்கும் ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையைப் புதுப்பித்திருந்தது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஊழல், பொருளாதார சமத்துவமின்மை, சமூக நீதி என்பன பற்றி வெளிப்படையாகப் பேசி வந்தது சகலரும் அறிந்ததே. ஆனால், இப்பொழுது அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சவால் எழுந்திருப்பது அவரது ஆதரவாளர்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. பண வீக்கம், கடன் நெருக்கடி போன்ற நாட்டின் மோசமான யதார்த்த நிலைமைகள் அவர்களது நம்பிக்கையை தவிடுபொடியாக்கி, தமது வாழ்க்கையைப் பாதிப்புக்குள்ளாக்குமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த 160 நாட்கள் ஆட்சியில் அனுர குமார திசாநாயக்கவின் தலைமை குறித்து மக்கள் என்ன எண்ணுகிறார்கள்? அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சரியான பாதையில் செல்கிறது என மக்கள் எண்ணுகிறார்களா? தேர்தலுக்குப் பின்னர் தொழில் வாண்மைத்துவத்தில் (Professionals) உள்ள சிலரினதும், பொதுமக்கள் சிலரினதும் கருத்துக்கள் என்னவென்று பார்ப்போம்.

இரத்மலானையில் வசிக்கும் 55 வயதுடைய டாக்சி (Taxi) சாரதியான **சரத் ஹேவகே (Sarath Hewage)** கூறுகையில், "புதிய அரசாங்கத்தின் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிக் மதிப்பிடுவதற்கு இன்னமும் காலம் கனியவில்லை. சில சாதகமான விடயங்களும், சில பாதகமான விடயங்களும் இருக்கின்றன. சில விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவர்களது தலைமை மிகவும் மோசமானது அல்ல எனக் கருதுகின்றேன்" எனக் கூறினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான **சந்தன அளுத்கே (Professor Chandana Aluthge)** , அரசாங்கம் பண வீக்கம், வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு போன்ற விடயங்களைக் கையாளும் முறை பற்றிப் பேசினார். அவர் கூறுகையில், "தரவுகளின்படி, பண வீக்கம் தற்பொழுது குறைந்திருக்கிறது. அடிப்படையில் இது எதிர்மாறானது. பெரும்பாலான மக்கள் பண வீக்கம் குறைந்தால் பொருட்களின் விலைகள் குறைவடையும் என எண்ணுகிறார்கள். ஆனால் தொடர்ந்து விலைகள் குறைந்து சென்றால் அது, உற்பத்தியாளர்களைப் பாதிக்கும். அதே நேரத்தில், பண வீக்கம் குறைந்தால் எப்படி அத்தியாவசியப் பொருட்களான அரிசி மற்றும் தேங்காய் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கின்றது என மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சில பொருட்களின் விலை ஏற்ற இறக்கம் விலைச் சுட்டெண்ணில் தாக்கம் ஏற்படுத்துவதில்லை. வாகனங்களின் போக்குவரவு செலவு அதிகரிப்பால் வாகனங்களின் விலைகள் அதிகரிக்கும் போது, அது பண வீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவு அறிக்கையின்படி, நிதிப் பற்றாக்குறை இருப்பது தெரிய வருகிறது. அதை அரசாங்கம் எப்படிச் சமாளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**ஸய்னாப் ஹுசெய்ன் (Zainab Hussain)**

வேலையில்லாப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், அரசாங்கத் துறையில் மேலதிகமான ஆட்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் ஆட்களைக் குறைப்பதானால், வேலை இழப்பவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது முக்கியமானதாகும். தனியார் முதலீடுகளைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்த வரையில், நிச்சயமற்ற நிலையே நிலவுகின்றது. அதானி குழுமம் (Adani Group) காற்றாலை மின்சக்தித் திட்டத்திலிருந்து விலகிக் கொண்டது முதலீட்டாளர்களுக்கு ஒரு எதிர்மறையான சமிக்ஞையைக்



கொடுத்திருக்கும்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை, அது இப்பொழுது வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தத் துறை வேலையற்றவர்களை சேர்த்துக் கொள்ளும் சாத்தியம் இருக்கின்றது. அத்துடன், இங்கு வேலை வாய்ப்பு குறைவாக இருப்பதால், பலரும் நல்ல வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர். அரசாங்கம் வேலை வாய்ப்புக்கான திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கின்றதா, பண வீக்கத்தை 5 சத வீதத்துக்கு மேலே போகாமல் வைத்திருக்கும் திட்டத்தின்படி செயற்படுகின்றதா என்பன தெளிவாகத் தெரியவில்லை. அரசாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியிருப்பதால், மக்கள் அவை நிறைவேற்றப்படும் என வலுவாக நம்புகிறார்கள். பொருளாதார மீட்சிதான் முன்னுரிமையானது. வங்குரோத்து அடைந்த ஒரு நாட்டுக்கு அடுத்த 5 முதல் 6 வருடங்களுக்கான திட்டத்தை வரவு செலவுத் திட்டம் கொண்டிருப்பது மிகவும் நீண்ட காலமாகும்." என்று தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் **பேராசிரியர் உபுல்**

அபேயரத்ன (Professor Upul Abeyratne) , தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொணடார்.

"நான் இந்த அரசாங்கத்தில் வெளிப்படையான தன்மை எதனையும் காணவில்லை. அவர்கள் வாக்காளர்களைத் தவறாக வழி நடத்தியுள்ளதுடன், பொது முன்னுரிமைகளையும் (Public privileges) தவறாகப் பயன்படுத்துகின்றனர். திட்ட நிர்மாணங்கள் சம்பந்தமாக அவர்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் இருப்பதுடன், பல்கலைக்கழகங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களைத் தடை செய்வது உட்பட குறிப்பிடத்தக்க அரசியல் தலையீடுகளும் உள்ளன. பொறுப்புக் கூறலைப் பொறுத்தவரை, ஒரு தவறை சாதாரணமாக ஏற்றுக் கொள்வது மட்டும் போதாது. அவர்கள் கட்டாயமாக முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அத்துடன், கல்வித் துறையில் தேவையற்ற தலையீடுகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. பொதுவாகச் சொல்வதானால், புதிய அரசாங்கத்துக்கும், முன்னைய அரசாங்கத்துக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசத்தையும் என்னால் காண முடியவில்லை" என்று கூறினார்

சமீபத்தில் போக்குவரத்து, கல்வி, நலத்துறை பாதுகாப்பு (Healthcare) ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் **சிரேஸ்ட பேராசிரியர் சிறீ ஹெட்டிகே (Senior Professor SiriHettige)** அவர்களிடம் கருத்துக் கேட்ட போது அவர் கூறியதாவது:

"நான்கு தசாப்தங்களாக நாட்டில் கிராமப்புற மக்களுக்கும் நகரப்புற மக்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருவது பற்றியும், 2022இல் பொருளாதார நெருக்கடி மோமடைந்த போது சாதாரண மக்கள் அதற்கு முகம் கொடுப்பதற்குப் பட்ட கஸ்டங்களை விபரிப்பதும் மிகவும் கடினமானது. இந்த நெருக்கடி 2024இல் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இட்டுச் சென்றது. இந்த மாற்றங்கள் எல்லாம் சேர்ந்து, வித்தியாசமாக ஏதாவது நடைபெறலாம் என்ற நம்பிக்கையுடன் புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆம், அவர்களால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும், ஆனால் ஒரு இரவில் அல்ல. 40 ஆண்டுகளாக இருந்தவற்றை சில மாதங்களில் மாற்றிவிட முடியாது. மாற்றம் தேவையில்லாத, முன்னுரிமைகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களை விட, கடுமையான சமூக, பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பவர்களின் கோரிக்கை மிகவும் வித்தியாசமானது.

முன்னைய ஊழல்கார அரசாங்கங்களினால் பாதிக்கப்பட்ட, குறைந்த வருமானம் உள்ள மக்களில் 60 சத வீதமானோர் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்தனர். இருந்தாலும், குறுகிய காலத்தில் நீங்கள் முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியாது. நான்கு தசாப்தங்களாக நிலவி வரும் நிலைமைகளை நான்கு மாதங்களில் மாற்றிவிட முடியாது. எம்மிடம் முன்னேற்றகரமான பொதுப் போக்குவரத்தோ, நலத் திட்டங்களோ கிடையாது. பல வருடங்களாக இருக்கும் இந்த நிலைமையை மாற்றியமைப்பது மிகவும் சிரமமானது.

பல தசாப்த காலமாக ஏற்பட்ட பாதிப்புகளை தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. நாடு இன்றிருக்கும் நிலையில், முடியுமான வரை நல்ல சிந்தனையாளர்களிடம் விரிவாகக் கலந்தாலோசிக்காமல் எதனையும் செய்ய முடியாது. கூட்டுப் பொறுப்பு கடினமாக இருந்தாலும், தனிப்பட்டவர்களை விமர்சிப்பதை விடுத்து, நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் கட்டாயமாக பங்களிப்பை வழங்க வேண்டும்" என அவர் தனது கருத்தை முன் வைத்தார்.

கண்டியிலுள்ள 25 வயதுடைய தொழில் முயற்சியாளரான **மொகமட் அத்தீஃப் (Mohammad Atheef)** அரசாங்கத்தின் சமீபத்தைய தீர்மானங்கள் எவ்வாறு தமது வாழ்க்கையில் சாதகமாகவும் பாதகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது குறித்து விபரித்தார்.

"வரி அதிகரிப்புக் காரணமாக உணவுப் பொருட்கள், எரிபொருள், மின்சாரம் என்பனவற்றில் விலைகள் அதிகரித்து வாழ்க்கையைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. அதனால் சேமிப்புச் செய்வதோ, ஒரு வியாபாரத்தைத் தொடங்குவதோ முடியாததாக இருக்கின்றது. எனது நண்பர்கள் உட்பட பல மக்கள் தமது செலவுகளைச் சமாளிக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

அரசாங்கம் பொருளாதாரத்தை சீரமைக்க முற்படுகிறது என்பதை நான் விளங்கிக் கொள்கிறேன். அதே நேரத்தில் மக்களின் சிரமங்கள் குறைக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகிறேன். புடவை வகைகள் மற்றும் மூலப் பொருட்கள் (Raw Materials) மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதை வரவேற்கிறேன்.

நான் ஒரு தொப்பி தயாரிக்கும் தொழிலைத் தொடங்க திட்டமிட்டுள்ளேன். ஆனால் அதற்குத் தேவையான உயர்தர துணியைப் பெறுவது பெரும் சவாலாக இருக்கிறது. அரசாங்கம் ஒரு சமச்சீரான கொள்கையைப் பின்பற்றினால், அது வியாபாரம் வளர்வதற்கு உதவியாக இருக்கும்." என அதீஃப் கூறினார்.

49 வயதுடைய **தமித் கூரே (Damith Cooray)** என்பவரிடம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் எதிர்காலம் எப்படி அமையும் என வினவிய போது,

"பல வருடங்களாக நாட்டில் நிலவிய ஊழல், கொள்ளை, வீண்விரயம் என்பனவற்றை ஒழித்துக் கட்டும் ஒரு நல்ல வேலையை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க செய்கிறார் என நான் நினைக்கிறேன். இதைத் தொடர்ந்தால் வருங்காலத்தில் கடன் இல்லாத, செழிப்பான ஒரு நாட்டை உருவாக்க முடியும் என நான் நம்புகிறேன்" எனக் கூறினார்.

வெள்ளவத்தையில் வீதியோர வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் 62 வயதான **மல்லிகா பத்திரானகே (Mallika Pathiranage)** என்பவரிடம் கருத்துக் கேட்டபோது,

"கடந்த பல வருடங்களாக நாம் இறக்குமதியிலேயே தங்கி இருந்துள்ளோம். ஆனால் இவற்றுக்கெல்லாம் தீர்வு காணக்கூடிய வளங்கள் எமது நாட்டிலேயே இருக்கின்றது. ஆனால் துரதிஸ்டவசமாக நாம் எல்லோரும் பழைய ஆளும் அமைப்பு முறைக்கே பழக்கப்பட்டுள்ளோம். எனவே, அமைப்பு முறை (System) முற்றாக மாற்றப்படுவது அவசியம். முதலில் நாட்டில் உள்ள

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# பொருளாதார யுத்தத்தில் உலக நாடுகளோடு மோதும் ட்ரம்ப்!




அமெரிக்க வரலாற்றில் ஒரு தனி மனிதர் அமெரிக்க செனட் மற்றும் காங்கிரஸ் அங்கீகாரமின்றி, 'எமர்ஜென்சி' (அவசரகால) அதிகாரங்களை கையிலெடுத்து, சட்டத்திற்கு புறம்பாக வரிவிதிப்பு செய்வது இதுவே முதல் முறையாம். பொருளாதார வரிவிதிப்பிற்காக, 'எமர்ஜென்சி' அதிகாரங்களை அதிபர் ட்ரம்ப் கையிலெடுக்க முடியாது என்கின்றனர் அமெரிக்க சட்ட வல்லுனர்கள்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 02.04.2025 அன்று அறிவித்துள்ள "விடுதலை நாள் வரி விதிகள்" (Liberation Day Tariffs) அகில உலகிலும் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. உலகெங்கிலுமுள்ள வர்த்தக உறவுகள் அதிர்ச்சிக்குள்ளானதால் பங்குச் சந்தைகள் படு வீழ்ச்சியை சந்தித்து வருகின்றன.

**ஏன் இந்த கிறுக்குத்தனம்?**

அமெரிக்க நாட்டின் உற்பத்தி துறையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஏற்பட்ட சரிவை சரி செய்து மீண்டும் அமெரிக்க உற்பத்தி துறையை உலகின் முதன்மையாக ஆக்கவும், பிற நாடுகளுடனான வணிகத்தில் அமெரிக்கா இன்றடைந்துள்ள வணிக பற்றாக்குறையை (Trade deficit) சரி செய்யவும் இந்த வரிவிதிப்பு யுத்தத்தை ட்ரம்ப் துவக்கி உள்ளார்.

முதலில் அனைத்து நாடுகளிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 10% வரியை விதித்தது. கூடவே, அதிகப் பற்றாக்குறை உள்ள ஒரு சில நாடுகளின்மீது அதிக வரி விதித்தது அமெரிக்கா.

அதை பரஸ்பர வரி விதிப்பு (reciprocal tariff) என ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியான வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்தார். இதன்மூலம் உலக நாடுகள் மத்தியில் ஏற்படும் அமெரிக்க வரிவிதிப்பிற்கெதிரான ஒற்றுமையை குலைக்க ட்ரம்ப முயற்சித்துள்ளார். இதன்மூலம் அனைத்து நாடுகளுடனும் தனக்கு சாதகமாக வர்த்தக ஒப்பந்தங்களை போட்டுக் கொள்ள ட்ரம்ப் எத்தனிப்பது தெரிகிறது.

போலியான தரவுகளின் அடிப்படையில் நாடுகளின் மீது வேறுபாடு நிறைந்த வரிகளைப் (Differential tariff) போடுவது, பிறகு ஒத்துவராத நாடுகளின் மீது தண்டிக்கும் நோக்கில் வரியை (Punitive tariff) சுமத்துவது என்ற கொள்கையின் வெளிப்பாடாக 'லிபரேஷன் டே' வரிச்சுமை வந்துள்ளது!

அதிபர் ட்ரம்பின் கூட்டாளியும், ட்ரம்ப் நிருவாகத்தின் முக்கிய அங்கமான பகாசுர பணக்காரரான எலோன் மஸ்க் (Elon Musk) இந்த வரி யுத்தத்தை வெகுவாக சாடியுள்ளார். எலோன் மஸ்கின் சகோதரர் கிம்பல் மஸ்க் (Kimbal Musk) "இவ்வரி விதிப்பு அரைக் கிறுக்கனின் செயல்" என சாடியுள்ளார்.

**ச.அருணாசலம்**

*இந்த நிலையில் 09.04.205 அன்று – 'லிபரேஷன் டே' வரி விதித்த 7 நாட்கள் கழித்து– பெரும்பாலான நாடுகளின் மீதான வரி விதிப்பை 90 நாட்களுக்கு 'நிறுத்தி' (pause) வைத்துள்ளார் ட்ரம்ப்! இது முழுமையான அந்தர் பல்டியா அல்லது கோமாளிதனமான குறும்பா?*

*09.04.205 அன்று சீனப்பொருட்களின் மீது 125% வரி விதித்து அறிவித்துள்ளார். ஏற்கனவே அமெரிக்கா விதித்த 104% வரியை எதிர்த்து சீனா, 'இந்நடவடிக்கை தவறுக்கு மேல் தவறிழைக்கும் செயல்' என கண்டித்து அமெரிக்க பொருட்களின் மீது 84% வரியை பதிலாக உயர்த்தியது. இதை பொறுக்காத ட்ரம்ப்,*

"எல்லா நாடுகளும் என் ......... ஐக் கொஞ்சி நாங்கள் அமெரிக்கா சொல்வதை கேட்டு புது வணிக ஒப்பந்தம் போட தயாராய் உள்ளோம் என்று கெஞ்சுகையில் சீனா மட்டும் மரியாதை செலுத்த தயாரில்லை" என்பதால் வரி விதிப்பை 125% மாக உயர்த்தியதாக ட்ரம்ப் 10.04.2025 அன்று தெரிவித்துள்ளார்.

இத்தகைய முரண்பட்ட, 'நித்தம் ஒரு நிலையான' வரிக் கொள்கை அறிவிப்புகளை உதிர்க்கும் ட்ரம்ப்பிற்கு பொருளாதார செயல்பாடு புரியவில்லையா? அல்லது கூட்டாளி எலோன் மஸ்கின் எதிர்ப்பை கண்டு பின் வாங்குகிறாரா என்பது உலகம் முழுவதும் ஊடகங்களால் விவாதிக்கப்படுகிறது. ஆனால், இதனால் அமெரிக்கா தனக்கு தானே இழைத்துள்ள காயமும், தலைக்குனிவும் மோடி பண மதிப்பிழப்பினால் இந்திய பொருளாதாரத்திற்கு கொடுத்த சம்மட்டி அடியை ஒத்ததாகும்.

உலகின் இரண்டாவது பொருளாதார வலிமையுள்ள சீனா அரை கிறுக்கனான ட்ரம்பையோ, அமெரிக்காவையோ நம்பகத்தன்மைக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் முறையற்ற அமெரிக்க நிபந்தனைகளையும், மிரட்டல்களையும் எதிர்க்கத் துணிந்துள்ளது, 150 நாடுகளுடனான தனது வர்த்தக உறவை விரிவுபடுத்தி அமெரிக்காவிற்கான ஏற்றுமதியை குறைக்க சீனா ஏற்கனவே பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. தென் கொரியா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பானுடனான தனது வணிக உறவுகளை மேலும் விரிவாக்க தன்னை தயார்படுத்தி வருகிறது. இதற்காக

இந்திய நாட்டுடனும் இணக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்ள சீனம் விரும்புகிறது.

ரஷ்யா, ஈரான் மற்றும் பிரேசில், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் இணைந்து பிரிக்ஸ் அமைப்பை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளது. உலகின் ஜி.டி.பி யில் 40% த்தை தன்னகத்தே கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்பு வணிக சுதந்திரத்தையும், பணப்பரிமாற்ற நேர்மையையும் பாதுகாக்க பரிவர்த்தனைகளை டொலர் நாணயத்தின் மூலம் நடத்துவதை தவிர்த்து, பல கரன்சிகளின் (ரூபாய், ரூபிள், ரென்மின்) வழியாக பரிவர்த்தனை மேற்கொள்ள முன்னெடுப்புகளை முடுக்கி விட்டுள்ளது.

நட்பு நாடு, பகை நாடு என்ற பாகுபாடின்றி, அண்டை நாடு, நேச நாடு என்ற பிணைப்பு இன்றி அனைத்து நாடுகளின் மீதும் சகட்டு மேனிக்கு வரி விதிப்பது அமெரிக்காவிற்கு உகந்த பலனைத் தருமா? அல்லது இது ஒரு பைத்தியக்காரச் செயலா?

இந்த வரிவிதிப்பின் மூலமாக 'அமெரிக்கா உற்பத்தி துறை' மீண்டும் தலை நிமிருமா?

அமெரிக்க நிறுவனங்கள் உள்நாட்டில் பொருட்களை குறைந்த விலையில் உற்பத்தி பண்ண இயலுமா? வரி விதிப்பின் மூலமாக இறக்குமதி குறைந்தால் அதை ஈடு கட்ட அமெரிக்க முதலாளிகள் அமெரிக்காவிலேயே உற்பத்தியை துவங்குவார்களா? அது சாத்தியமா? அல்லது, வரிவிதிப்பினால் பொருட்களின் விலை ஏற்றம் ஏற்படுமா, அது (அந்த விலையேற்றம்) அமெரிக்க மக்களின் தலையில் வந்து விழுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

புதிய வரி விதிப்பினால் கிடைக்கும் வருவாயை கொண்டு, அமெரிக்க அரசு அந்நாட்டு முதலாளிகளுக்கு கொடுத்த வரிச் சலுகையினால் ஏற்பட்ட அரசு வருவாய் இழப்பை சரி செய்ய ட்ரம்ப் முயற்சி செய்கிறார் என்பது ஊரறிந்த இரகசியமாக உள்ளது.

சாமானியர்களுக்கு விலையேற்றமும், கொழுத்த முதலாளிகளுக்கு வரிச்சலுகையுமே ட்ரம்ப்பின் வரி யுத்தத்தின் பின்புலமாகும்.

உலக நாடுகள் அனைத்தும், இரண்டாவது பெரிய பொருளாதார வலிமை கொண்ட சீனாவும் ரஷ்யாவும், இந்த வரி விதிப்பை ஒருதலை பட்சமானது என கண்டிக்கும் வேளையில், நேச நாடுகளான பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய யூனியன், ஜப்பான் அவுஸ்திரேலியா, தென்கொரியா போன்றவையும் ட்ரம்ப்பின் வரி விதிப்பை கண்டித்து எதிர்வினை ஆற்றியுள்ளனர். கனடா, மெக்சிகோ போன்ற அண்டை நாடுகளும் இவ்வரி விதிப்பை எதிர்த்து எதிர் வரிகளை போட்டுள்ளனர்.

உலகின் மிகச்சிறிய நாடான சிங்கப்பூரின் பிரதமரின், 'சிங்கப்பூர் இவ்வரி விதிப்பால் அதிகம் பாதிக்கப்படவில்லை' என்ற கருத்து இன்று வைரலாக உலகை வலம் வருகிறது.

உலக நாடுகளை அச்சுறுத்த இத்தகைய நாடகத்தை ட்ரம்ப் ஆடுகிறார். தடாலடியாக வரி விதித்தால் நாடுகள் நடுங்கிக் கொண்டு அமெரிக்க அரசுடன் பரஸ்பர வணிக ஒப்பந்தம் காண முன்வருவர் என்பது ட்ரம்ப்பின் எதிர்பார்ப்பு.

ஆனால், இந்தியா டரம்ப்பின் அதிரடி அறிவிப்பை எதிர்த்து (இந்தியா மீது 27% வரி விதிப்பு) மூச்சே விடவில்லை, இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில், அமெரிக்காவுடனான இந்திய ஏற்றுமதி வெறும் 81 பில்லியன் டொலர்கள் தான் எனவும், இதில் அமெரிக்காவிற்கு துண்டு விழுவது வெறும் 37 பில்லியன் டொலர்கள் தான் என சமாதானம் கூறப்பட்டது.

ஆனால், இத்தகைய வரி விதிப்பிற்கு மூல காரணம் – இன்றைய உலகளாவிய குழப்பத்திற்கு மூல காரணம் – சீனாவின் முறையற்ற வணிக நடவடிக்கைகள் தான் என இந்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் (Shri Piyush Goyal) கூறியுள்ளார்.

இப்படி இவர் அமெரிக்காவிற்காக 'ஜால்ரா' போட்டாலும், மோடி தனது நண்பனான ட்ரம்பை விமர்சிக்காமல் இந்திய நலன்களை மறந்து 'மௌனமாக' இருந்தாலும், பேட்டை ரவுடியாக வலம் வரும் ட்ரம்ப் இந்தியாவிற்காக மனமிரங்கப் போவதில்லை என்பது வல்லுனர்களின் கருத்தாகும்.

### கோட்டைக்குள்ளே குத்து வெட்டு

இந்தச்சூழலில் இந்திய அரசு தான் இன்னமும் அமெரிக்காவின் கடைக் கண் பார்வையை பெற 'சீன எதிர்ப்பை' கையிலெடுத்துக் கொண்டு சீனத்துடனான நல்லுறவை ஒத்துழைப்பை மறுத்து தனக்கு தானே சூடு போட்டு கொள்கிறது. 'குளோபல் சௌத்' (Global South) நாடுகளின் 'தலைவனாக' நொடிக்கு நூறு முறை கூறிக்கொள்ளும் இந்தியா, 'குளோபல் சௌத்' நாடுகளின் நலன்களை புறந்தள்ளி அமெரிக்காவின் நலன்களுடன் தன்னை இணைத்து கொள்ள இதுவரை விழைந்து வருகிறது. இன்று அதற்கும் வேட்டு வைக்க ட்ரம்ப தயாராய் உள்ளார். அவருக்கு தெரிந்ததெல்லாம் அமெரிக்க முதலாளிகள் நலன் தான் என்றால் மிகையில்லை.

இப்பொழுதாவது இந்திய ஆட்சியாளர்கள் விழித்துக்கொள்ள வேண்டும், பிரிக்ஸ் மற்றும் சீனத்துடனான இணக்கமும் வளர்ச்சியும் ஆசியாவிற்கு ஏன் உலகத்திற்கே புதிய உத்வேகத்தை கொடுக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய–சீன நல்லுறவும் தொழில் கூட்டுறவும் உலகிற்கு புதிய பாதையை காட்டும்! அதன் மூலம் உலகில் அமைதியும் சமாதான சக வாழ்வும் மலரும், வெள்ளை இன ஆதிக்கம் உதிர்ந்து அனைத்து இனங்களின் வாழ்வும் மலரும்.

**பிந்திய செய்தி:**

சீனாவின் 84% இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா, சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை 125% இலிருந்து 145% ஆக உயர்த்தியுள்ளதாக ட்ரம்ப் அறிவித்தார். இதனால் கடும் அதிருப்தி அடைந்த சீனா, அமெரிக்காவுக்குப் போட்டியாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை 125% ஆக உயர்த்தி உள்ளது.

---

"இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு, ஐரோப்பா பலவீனமடைந்ததாலேயே, அமெரிக்கர்கள் சுதந்திர உலகம் என்று அழைக்கப்படுபவர்களின் தலைவர்களாக மாறினார்கள். அத்தோடு, அவர்கள்தான் இந்தக் கிரகத்தில் பெரும்பான்மையான மோதல்களைத் தொடங்கினார்கள். அதற்கு முன்னர், அனைத்து அவலங்களும் (நெப்போலியன் யுத்தம், காலனியாதிக்கம் மற்றும் முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தங்கள்) ஐரோப்பாவிலிருந்தே தோன்றின."

*- ரஷ்ய வெளிநாட்டமைச்சர் சேர்கே லவ்ரோவ் TASS செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியொன்றில் கூறியது.*

**முன்பக்கத்தொடர்ச்சி...**

ஏற்கெனவே கடந்த வருடம் (2024) நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பனவற்றில் வெற்றி (நாடாளுமன்றத் தேர்தலில் 159 உறுப்பினர்கள் பெற்று மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பலத்தை) பெற்றுள்ள போதிலும், அந்த வெற்றிகளின் மூலம் அரசாங்கம் எதையும் சாதிக்க முடியவில்லை என்பதை அதன் கடந்த ஆறு மாதகால ஆட்சி எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் எதிர்க்கட்சிகளின் வசம் போய்விட்டால் தனக்கு மேலும் சிக்கலாகிவிடும் என அரசாங்கம் எண்ணுகிறது. எனவே, அவற்றையும் தம் வசப்படுத்தி, மேலிருந்து அடிமட்டம் வரை தமது அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்த முன்வந்திருக்கிறது.

உள்ளூராட்சி சபைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்வாகத்தை மேற்கொள்ளாத இவ்வளவு காலமும், உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகளே சபைகளின் நடவடிக்கைகளை நடத்தினர். அந்த அதிகாரிகளின் மீதும் நம்பிக்கை இல்லாதபடியினாலேதான், அரசாங்கம் தேர்தலை நடத்தி தனது தேசிய மக்கள் சக்தி கட்சியின் நேரடி அதிகாரத்தின் கீழ் அவைகளைக் கொண்டுவர எண்ணுகிறது.

உள்ளூராட்சி சபைகளையும் தமது நேரடி அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்துக்கு ஒரு அடிப்படைக் காரணம் உண்டு.

தேசிய மக்கள் சக்தி தான் அதிகாரத்துக்கு வந்தால் "அமைப்பு மாற்றம்" (System Change) கொண்டுவரப்படும் என்று என்னதான் சொல்லிக்கொண்டாலும், அதனால் அந்த மாற்றத்தை இதுவரை கொண்டுவர முடியாதுள்ளதுடன், இனிமேலும் கொண்டுவர முடியாது என்பதே உண்மையாகும்.

இன்றைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்கள் பயன்படுத்திய அரசியல் – நிர்வாக அமைப்புகளையே பயன்படுத்துவதுடன், முன்னைய அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகளையே தொடர்கின்றது. முன்னைய அரசுகளின் தொடர்ச்சியாகச் செயல்பட்டால், பெரும்பாலும் இவ்வருடக் கடைசியில் 2022 இல் ஏற்பட்டது போன்ற ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டு, மக்கள் மீண்டும் ஒரு கிளர்ச்சியில் (அரகலய) ஈடுபடும் சூழல் ஏற்படும்.

இனி ஒரு கிளர்ச்சி ஏற்பட்டால், அது 2022 இல் ஏற்பட்டதை விட அதிக ஆக்ரோசமானதாக இருக்கும். ஏனெனில், இனி ஏற்படக்கூடிய கிளர்ச்சி, தம்மை ஏமாற்றி அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக இருக்கப் போவதால் மிகவும் வீச்சாகவே இருக்கும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், அரசுக்கு உள்ள ஒரே வழி போராடும் மக்கள் மீது அடக்குமுறையைப் பயன்படுத்துவதுதான். ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களிலேயே அரசாங்கம் பொலிசையும் நீதிமன்றங்களையும் பயன்படுத்தியே ஆட்சி நடத்தி வருகின்றது. இலங்கையின் வரலாற்றில் இதுபோல முன்னர் ஆட்சியில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் செயல்பட்டது கிடையாது.

இதில் ஒரு உளவியல் பிரச்சினையும் இருக்கிறது. அதாவது, நீண்ட காலம் அதிகாரம் கிடைக்காது விரக்தி நிலையில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு 1977 இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரம் கிடைத்ததும், எப்படித் தனது வன்மத்தை நாட்டு மக்கள் மீது தீர்ப்பதற்காக எதேச்சாதிகார ஆட்சி முறையையும் பொருளாதாரச் சீரழிவையும் கொண்டு வந்து மக்களைத் தண்டித்தார் என்பதை நாம் அறிவோம்.

அதேபோல, இதுவரை காலமும் (சுமார் 60 வருடங்கள்) அதிகாரம் கிடைக்காமல், இரண்டு தடவைகள் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதக் கிளர்ச்சிகள் நடத்தி அதிலும் தோல்வி கண்ட ஜே.வி.பி. கட்சியைத் தலைமைக் கட்சியாகக் கொண்ட இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தனக்கு 'வராது வந்த மாமணியே' என்பது போலக் கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்கள் மீது ஒரு பாசிச ஆட்சியைத் திணிக்கவே முயற்சிக்கும். அந்த வகையிலேயே அரசாங்கத்தின் இதுவரை கால நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. ஜெர்மனியில் ஹிட்லரும் இந்த வகையிலேயே மக்கள் மீது சர்வாதிகாரத்தைத் திணித்தான்.

எனவே, நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தல் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கை அல்ல. அது இன்றைய அரசாங்கம் தனது அதிகாரத்தைக் கீழ்மட்டம் வரை கொண்டு செல்வதற்கான ஒரு நடவடிக்கை. ஆனாலும், மக்கள் அந்தத் தேர்தலைப் பகிஸ்கரிக்க முடியாது. பகிஸ்கரிக்கவும் கூடாது.

பதிலுக்கு கடந்த வருடம் இலங்கை மக்கள் இந்த பிற்போக்கு, இனவாத, மக்கள் விரோத அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்த தவறைச் செய்ததை நிவர்த்தி செய்வதற்காக, இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் போட்டியிடும் ஒவ்வொரு சபையிலும் அதைத் தோற்கடித்து, அரசின் சர்வாதிகார எண்ணங்களுக்கு ஒரு தடை போட வேண்டும்.

எதிர்காலத்தில் இந்த அரசுக்கு எதிராக மேற்கொள்ளவுள்ள வெகுஜனப் போராட்டங்களுக்கு முன்னோடியாக மக்கள் முதலில் இந்தத் தேர்தலை அரசுக்கு எதிராக முடியுமான வரை பயன்படுத்த வேண்டும். இதுவே தற்போது முன்னாலுள்ள உடனடிப் பணியாகும்.

---

"நாங்கள் மார்க்சின் கோட்பாடுகள் முழுமை பெற்றவை என்றோ அல்லது மீறமுடியாதவை என்றோ கருதவில்லை. மாறாக அவை சோசலிஸ்ட்டுகள் வாழ்க்கையின் போக்கோடு இயைந்து செல்ல விரும்பினால் எல்லா திசைகளிலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கட்டமைப்பின் அடிக்கற்களை மட்டுமே அளித்துள்ளது என்றே கருதுகின்றோம். ரசிய சோசலிஸ்ட்டுகள் மார்க்சியக் கோட்பாட்டை தாங்களே சுதந்திரமாக வளர்த்து விரிவாக்குவது மிகவும் இன்றியமையாதது என்று கருதுகின்றோம். ஏனென்றால் மார்க்சின் கோட்பாடுகள் பொதுவான வழிகாட்டும் கொள்கைகளை மட்டுமே அளிக்கின்றது. இவை இங்கிலாந்தில், ஃபிரான்ஸில் போலல்லாது வேறுவிதமாகத்தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருக்கும் ஃபிரான்ஸில், ஜெர்மனியில் போலல்லாதும், ஜெர்மனியில் ரசியாவில் போலல்லாததுமாக நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கலாம். எனவே நாம் மிகவும் கருத்து முரண்பாடான கூறுகளையும் மிகவும் வெளிப்படையாக விவாதிக்கவும் கோட்பாடுரீதியான கட்டுரைகளை எழுத எல்லாத் தோழர்களுக்கும் நம்முடைய இதழ்களில் மனமுவந்து இடமளித்து அவர்களை எழுதச் சொல்லி வரவேற்க வேண்டும்."

**–லெனின்**, 'நமது திட்டம்' – (லெனின் முழுத் தொகுதி–4, பக்கம் 210)

# ஜே.வி.பி. கொலை செய்த 1,300 பேரின் விபரம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது!




*1988 – 89* காலகட்டத்தில் ஜே.வி.பி. யால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியின் போது அந்த இயக்கத்தால் கொல்லப்பட்ட அரசியல்வாதிகளில் *1,300* பேரின் விபரங்களை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோகிணி கவிரத்ன (Rohini Kaviratne) நாடாளுமன்றத்தில் முன் வைத்துள்ளார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அந்த நேரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பெருந்தொகையானோர் ஜே.வி.பியால் கொல்லப்பட்டுள்ளனர்.

அப்போதிருந்த அரசாங்கம் சட்டத்துக்கு புறம்பாக மேற்கொண்ட கொலைகள் மூலம் அந்தக் கிளர்ச்சியை ஒடுக்கியது.

“ஜே.வி.பியினால் *1,783* ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும், ஏனைய கட்சிகளைச் சேர்ந்த *1,761* உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். அவர்களில் *1,300* பேரின் பெயர்களை நான் இன்று நாடாளுமன்றத்தில் முன் வைத்துள்ளேன்” என ரோகிணி கவிரத்ன கூறினார்.

“இந்த *1,300* பேரும் ஜே.வி.பியின் துவக்குகள், வாள்கள், கத்திகளால் கொல்லப்பட்டவர்கள்” என அவர் கூறினார்.

அப்பொழுது கைத்தொழில் அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தத் தொகுதியைச் சேர்ந்த களனி பொலிசாரின் சதி நாச வேலைகளுக்கு எதிரான பிரிவின் (Kelaniya Police anti - subversive unit) செயல்பாடுகள் பற்றிய பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை (Batalanda Commission Report) பற்றிய விடயம் முன்னுக்கு வந்ததை அடுத்து, *1988 – 89* காலகட்ட வன்செயல்கள் பற்றிய விடயம் அரசியல் முன்னரங்கிற்கு வந்துள்ளது.

தான் இந்த விடயங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்க உறுப்பினர்கள் குறுக்கீடு செய்ததாக ரோகிணி கவிரத்ன தெரிவித்திருக்கிறார். அப்பொழுது அவர்,

“இப்பொழுது அமைதியாக இருந்து கேளுங்கள். விடுதலைப் புலிகள் சிறுவர் போராளிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பே ஜே.வி.பி. சிறுவர் போராளிகளைப் பயன்படுத்தியுள்ளது. அவ்வாறு பயன்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் 13 வயதான கன்ரேல் பொனிக்கி – டொலி (Kantale bonikki - dolly) என்பவர். அந்தப் பிள்ளையின் மூலமாக 70 வயதான மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.”

“ஜோர்ஜ் ரத்நாயக்க என்பவர் ஒரு ஆசிரியர் என்பதுடன், கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு மகத்தான தொழிற்சங்கவாதியுமாவார். அவரும் ஒரு குழந்தைப் போராளி மூலமே கொலை செய்யப்பட்டார்.”

“நீங்கள் சில வேளைகளில் காலியைச் (Galle) சேர்ந்த பங்கு தர்மே (Banku Dharme) என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அவரது மனைவி கர்ப்பிணியாக இருந்தார். அந்தப் பெண்ணின் வயிற்றை வெட்டி உள்ளேயிருந்த குழந்தையை எடுத்து ஒரு முக்காலியில் (Stool) வைத்தார்கள். அதற்குக் காரணம், தர்மே ஒரு ஐக்கிய தேசியக் கட்சிக்காரர் என்பதாகும்.”

“லக்கல – பல்லேகம மத்திய கல்லூரி (Laggala - Pallegama Central Collage) அதிபர் ரன்பண்டா (Ranbanda) தனது பாடசாலை மாணவர்களை ஜே.வி.பி. வீதிக்கு இட்டுச் செல்வதற்கு அனுமதிக்கவில்லை என்ற காரணத்தால் அவரைக் கொலை செய்தனர்.”

“சாகரிக்க கோமெஸ் (Sagarika Gomez), பிரேமாவதி மனம்பேரி – Premawathi Manamperi (*1971* ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது இராணுவத்தால் கதிர்காமத்தில் வைத்து கொல்லப்பட்டவர்) போல உங்கள் ஆட்களால் கொலை செய்யப்பட்டு கடற்கரையில் நிர்வாணமாக வீசப்பட்டிருந்தாள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.”

“இவைகளைக் கேட்டு உங்களுக்கு அழுகை வரவில்லையா என சபாநாயகரைக் கேட்க விரும்புகிறேன். நான் ஜே.வி.பியினால் கொல்லப்பட்டவர்கள் *1,300* பேரின் பெயர்களை இங்கு முன் வைத்துள்ளேன். உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த *900* பேரின் பெயர்களையும் முன் வைத்துள்ளேன்.”

“அவர்கள் மட்டுமல்ல, இந்தியாவுடன் சேர்ந்து பயணித்ததிற்காக எதிர்ப்புத் தெரிவித்ததின் போது மரணத்தைத் தழுவிய *41,813* பேருக்கும் கூட நீதி வேண்டும்.”

(Economy Nest (March/21) பத்திரிகையில் வந்த கட்டுரையின் முக்கியமான பகுதிகள்)

---

பிரச்சனைகளின் மையக்கரு வரையில் (பிரச்சனையின் தன்மை மற்றும் பிரச்சனையின் பல அம்சங்களிடையே உள்ள இணைப்பு) தமது ஆய்வை ஊடுருவி செய்யாதவர்கள்தான், எடுத்தேன் கவிழ்த்தேன் என செயல்படுவர். அத்தகையவர்கள் சறுக்கி கீழே விழுவது நிச்சயம்!

**– மாவோ**

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# ஜே.வி.பியின் அத்துமீறல்களும் விசாரிக்கப்பட வேண்டும்!




ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகளை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைப்பதற்காக சில தந்திரங்களில் ஈடுபட்டுள்ளது. அது இப்பொழுது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான அல் ஜஸீரா (Al Jazeera) தொலைக்காட்சியின் பேட்டியை சண்டைக்கான விடயமாகத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. பலரும் அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வை அரசாங்கம் தடுக்கத் தவறியதைப் பற்றியோ, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதைப் பற்றியோ பேசுவதை விடுத்து, 1990களில் வெளியிடப்பட்ட பட்டலந்த ஆணைக்குழு (Batalanda Commission) அறிக்கை பற்றியே பேசுகிறார்கள். இன்னும் சில வாரங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு நல்லது எதையும் செய்யாத ஒரு நிலையில் இருக்கின்றது.

பட்டலந்த விசாரணை அணைக்குழு 1994 இல் சந்திரிக ஜனாதிபதியாக வந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க உட்பட முன்னைய அரசாங்கத்தின் சில முக்கியமான உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட சித்திரவதை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் பற்றி விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழுவாகும். இருப்பினும், சில பாரதூரமான பிரச்சினைகள் உருவாகும் என நினைத்ததால், குமாரதுங்க அந்த ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன் வைக்காமல் நிறுத்தி விட்டார்.

1999 இல் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து இரண்டாவது தடவையாக ஜனாதிபதியான சந்திரிக, 2005 ஜனாதிபதி தேர்தலின் போது தனது கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தார். மகிந்த வெற்றி பெறுவதைத் தடுப்பதற்கு சந்திரிக எவ்வாறு முயற்சித்தார் என்பதை பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அம்பலப்படுத்தினார். பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவினால் குற்றம் சாட்டப்பட்ட ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் திருமதி குமாரதுங்க ஏன் ஆதரித்தார் என்பதை விளக்க வேண்டிய கடமைப்பாடு சந்திரிகவுக்கு உண்டு,

2015 ஜனாதிபதி தேர்தலில் சிறிசேனாவை வெற்றி பெற வைப்பதற்காக ஜே.வி.பி. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேனிலவு கொண்டாடியது. பின்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த ஐக்கிய தேசிய முன்னணி (நல்லாட்சி) அரசாங்கத்தின் தேசிய நிறைவேற்றுக் குழுவின் ஒரு உறுப்பினராக அனுர குமார திசாநாயக்க இருந்தார். 2018இல் ஜனாதிபதி சிறிசேனவும் ராஜபக்சாக்களும் அரசாங்கத்தை கவிழ்க்க முயன்றபோது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இருப்பையும், ரணிலின் பிரதமர் பதவி நீடிப்பதையும் ஜே.வி.பி. உத்தரவாதப்படுத்தியது.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக ஜே.வி.பி. தலைவர்களான திசாநாயக்கவும் விஜித ஹேரத்தும் ரணில் விக்கிரமசிங்கவுடன் சதையும் நகமுமாக இணைந்து நின்றனர். ஜே.வி.பி. தலைவர்கள் நல்லாட்சி காலத்தின் போது அலரி மாளிகையில் உள்ளும் புறமுமாக இருந்தனர். ஜே.வி.பியின் ஆதரவு இருந்த போதிலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தலையில்லாத கோழி போல இருந்து தேசிய பாதுகாப்பு பலவீனப்பட்டிருந்த நேரத்தில்தான், 2019இல் தேசிய தவ்ஹீத் ஜமத் (National Thowheed Jamath) அமைப்பால் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ரணிலை கடுமையாக ஆதரித்த ஜே.வி.பி. தலைவர்களா இன்று பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் கண்டு பிடிப்புகள் குறித்து அக்கறைப்படுகிறார்கள்? திறைசேரி பிணைமுறி மோசடியில் ஐ.தே.க. தலைவர்களுக்கு உள்ள தொடர்பு குறித்து அனைவருக்கும் தெரியும். அதைத் தெரிந்து கொண்டுதான் ஜே.வி.பி. தலைவர்கள் ஐ.தே.கவுக்கும் அதன் தலைவர் ரணிலுக்கும் ஆதரவு வழங்கினர். இது குறித்து விளக்கம் சொல்ல வேண்டிய கடப்பாடு ஜே.வி.பிக்கு உண்டு.

எந்தவொரு குற்றமும் நிச்சயமாகத் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஒதுக்கி வைக்க முடியாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன் வைக்க வேண்டிய கடமைப்பாடுள்ளது. ஏனென்றால், 1980களில் அவர்களது உறுப்பினர்களும் அனுதாபிகளும் சித்திரவதைகளுக்கும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்கும் உள்ளானதால் அவர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு தார்மீகக் கடமை உண்டு.

பட்டலந்த தவிர வேறு பல சித்திரவதைக் கூடங்களும் இருந்துள்ளன. அவற்றுள் எலியகந்த (Eliyakanda) மற்றும்

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...